# இந்திய தண்டனைச் சட்ட தொகுப்பு

# INDIAN PENAL CODE

## அத்தியாயம் - 1

## CHAPTER – 1

இந்தியா முழுவதற்கும் பொதுவான ஒரு குற்ற இயல் சட்டத்தொகுப்பு மிகவும் அவசியம் என்று கருதி, கீழ் கண்டவாறு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

இந்த சட்டம் 1860-ஆம் உருவாக்கப்பட்டது. இதை மெக்காலே பிரபுவும் அவரைச் சேர்ந்த நான்கு சட்ட நிபுணர்களும் உருவாக்கினார்கள் இந்த சட்டத்தில் 23 அத்தியாயங்களும் 511 சட்டப் பிரிவுகளும் உள்ளன.

### 1. பெயரும் எல்லையும் (Title and extent of operation of the code):

"இந்தியத் தண்டனைச் சட்ட தொகுப்பு" என்று இந்தச் சட்டம் அழைக்கப்படும். ஜம்மு, காஷ்மீர் பிரிவுகள் நீங்கலாக உள்ள இந்தியா முழுமைக்கும், இந்த சட்டத்துக்கு வரம்பு உண்டு.

### 2. இந்திய எல்லைக்குள் நடைபெறும் குற்றங்களுக்கு தண்டனை ( Punishment of offences committed within India):

இந்தியாவில் குற்றவாளிகள் ஒவ்வொருவரும் இந்த சட்டப் பிரிவுகளில் கூறப்பட்டுள்ளபடி தத்தமது நடவடிக்கைகளுக்கு ஏற்ப தண்டனை பெறுவர். சட்டப்படி செய்ய வேண்டியவற்றைச் செய்யாது விட்டாலும் குற்றமாகும். அவர்களை இந்தச் சட்ட பிடியின்றி வேறு எந்த விதமாகவும் தண்டிக்கலாகாது.

### 3. வெளி நாடுகளில் செய்யப்பட்ட குற்றங்கள் ( Punishment of offences committed beyond, but whichby law may be tried within India):

இந்தியாவில் இயற்றப்பட்ட எந்த சட்டத்தின் கீழாவது இந்தியாவுக்கு வெளியே நடைபெற்ற ஒரு குற்றத்துக்காக ஒருவரை குற்றம் சாட்டி விசாரிக்க வேண்டுமென்றால், அவரையும் இந்த சட்டத்தொகுப்பின்படியேதான் விசாரணை நடத்த வேண்டும். குற்றம் இந்தியாவுக்கு வெளியே செய்யப்பட்டிருந்தாலும், இந்தியாவுக்குள் செய்யப்பட்டிருந்தால் எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அப்படியே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 4. Extension of code to extra – territorial offences:

(i) இந்தியாவுக்கு உள்ளும், புறமும் உள்ள இந்திய குடிமக்கள் செய்யும் குற்றங்களுக்கும்.

(ii) இந்தியாவில் பதிவு செய்யப்பட்டுள்ள கப்பல் அல்லது விமானத்தில் செய்யப்பட்ட குற்றங்களுக்கும், இந்த சட்டத் தொகுப்பில் கூறப்பட்டுள்ளவை பொருத்தமாக இருக்கும்.

***விளக்கம் :***

இந்தியாவில் தண்டனை பெறத்தக்க குற்றத்தை இந்தியாவுக்கு வெளியே செய்தாலும் குற்றமாகும்.

***உதாரணம் :***

இந்திய குடிமகனான கோபால், உகந்தா நாட்டில் ஒரு கொலையைச் செய்கிறான். இந்தியாவில் எங்கே இருந்தாலும் அங்கேயே அந்த கொலை குற்றத்துக்காக அவனை விசாரித்து தண்டிக்கலாம்.

## 5. Certain laws not to be affected by this Act :

இந்திய அரசின் கீழ் பணிபுரியும் தரை, கப்பல், விமானப் படைகளை சார்ந்த வீரர்களையும், அதிகாரிகளையும், கலகம் (Mutiny) செய்வதற்காகவும், படையினை துறந்து ஓடி விடுவதற்காகவும் தண்டிப்பதற்கு என உருவாக்கப்பட்டுள்ள எந்தச் சட்டத்தையும், இந்த சட்டத்தொகுப்பு பாதிக்காது.

அதே போன்று இயற்றபட்டுள்ள விசேஷச் சட்டங்களை எதனையும் பிராந்திய சட்டங்கள் எதனையும் இந்த சட்ட தொகுப்பில் உள்ளவை பாதிக்காது.

# அத்தியாயம் - 2
# (CHAPTER– 2)

## பொது விளக்கங்கள் (General Explanations)

## Definition in the code to be understood subject to Exceptions

குற்றங்கள் ஒவ்வொன்றும் இந்தச் சட்டத்தின் கீழ் அவற்றுக்கு உரிய தண்டனைகளுடன் விளக்கப்பட்டுள்ளது. அவற்றுக்குறிய விதிவிலக்குகளும் தரப்பட்டுள்ளன. இந்த விதிவிலக்குகள், 'பொது விதிவிலக்குகள்', என்ற அத்தியாயத்தின் கீழ் விளக்கப்பட்டுள்ளன.

எனவே சட்டத்தைப் பயன்படுத்தும் போது விதி விலக்குகளுக்கு உட்படுத்திப் பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வோர் இடத்திலும் விதிவிலக்குகளை குறிப்படவில்லையே என்று ஒதுக்கிவிடக் கூடாது.

***உதாரணம் :***

குற்றங்கள் விளக்கி எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் எந்தப் பிரிவிலும் ஏழு வயதுக்குக் குறைவான குழந்தை அந்தக் குற்றங்களை புரிந்தாலும், அதனை குற்றமாகக் கொண்டு தண்டனை அளிக்க முடியாது என்பதைக் குறிப்படவில்லை. ஆனால் சட்ட குறிப்புகளைப் படிக்கும்போது, ஏழு வயதுக்கு குறைந்த குழந்தை அந்த குற்றத்தை செய்திருப்பினும் அதனை தண்டனைக்கு உரியதாகக் கருதக்கூடாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## Sense of Expression once explained:

ஒவ்வொரு சட்ட விதியும் ஆங்காங்கு விவரிக்கப்பட்டுள்ளது. எத்தகைய பொருள் கொள்ளப்பட வேண்டும் என்று ஓர் இடத்தில் விளக்கப்பட்டிருக்கிறதோ, அதே பொருளில் இந்த சட்டம் முழுவதிலும் அந்த பதம் பயன் படுத்தப்பட்டுள்ளது.

**'அவன் (ர்)'** (Gender) என்று இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்படும் பதமும் அதன் பல்வேறு உருபுகளும், ஆண், பெண் என்ற பாகுபாடின்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**(Number)** பன்மையில் கூறப்பட்டவை ஒருமையிலும் ஒருமையில், வருகின்றவற்றைப் பன்மையிலும் எடுத்துக் கொள்ளலாம். மாறுபாடாகக் கொள்ள வேண்டிய இடங்களில் சிறப்பாகச் சுட்டிக் காட்டுப்பட்டுள்ளது..

**'ஆண்'** (Man) என்ற சொல் ஆண்களில் எல்லா வயதினரையும் 'பெண்' என்ற சொல் பெண்களில் எல்லா வயதினரையும் வயது வித்தியாசமின்றிக் குறிக்கும்.

**'நபர்'** (Person) என்பது ஒரு கம்பெனி, சங்கம், ஆட்கள் கொண்ட குழு ஆகியவற்றையும் குறிக்கும்,

**'பொதுமக்கள்' (Public),** என்பது எல்லா மக்களையும், சமூகத்தினரையும் குறிக்கும்.

**'அரசு ஊழியர்' (Servant of Government )** என்ற சொல் அரசாங்கத்தால் அல்லது அரசாங்க அதிகாரத்தால் இந்தியாவில் பணி புரிந்து கொண்டிருப்பரையும், நியமிக்கப்பட்டுள்ளவரையும் குறிக்கும்.

**'அரசு' (Government)** என்பது மத்திய அரசையும், மாநில அரசையும் குறிக்கும்.

**'இந்தியா' (India)** என்பது ஜம்மு, காஷ்மீர் நீங்கலாக உள்ள இந்தியா முழுவதையும் குறிக்கும்.

**'நீதிபதி' (Judge),** நீதிபதி பதவியில் இருப்போர், உரிமை இயல், அல்லது குற்ற இயல் நடவடிக்கைகளில் ஒரு தெளிவான தீர்ப்பினை உரைக்கும் அதிகாரம் பெற்றவர். இந்த சொல் தனி நபரையும் குறிக்கலாம், ஒரு குழுவையும் குறிக்கலாம்.

**Court of Justice** நீதி பூர்வமாக செயல்படும் அதிகாரம் பெற்ற ஒரு நீதிபதி அல்லது நீபதிகளை கொண்ட ஒரு குழு நீதி பூர்வமாக செயல்படும் போது அதனை நீதி மன்றம் என்று குறிப்பிடுகிறோம்.

## பொது ஊழியர் (Public Servant) :

பொது ஊழியர் என்ற சொல் அடியில் கண்டவர்களை குறிக்கும்

1. முப்படைகளிலுள்ள அலுவலர்கள்
2. நீதிபதிகள் ஒவ்வொருவரும்
3. சட்ட பிரச்சனை அல்லது வேறு விவகாரங்களை பரிசீலித்தல், அறிக்கை கொடுத்தல், ஆவணத்தை வைத்திருத்தல், உண்டாக்குதல் அதிகார பூர்வமாக்குதல், சொத்துக்களை பொறுப்பேற்றல், நீதி பூர்வமான வேலைகளைச் செய்தல், சத்தியப்பிரமாணம் செய்வித்தல், மொழி பெயர்த்தல், நீதி மன்றத்தின் ஒழுங்கை நிலை நாட்டல், ஆகியவற்றிற்காக நீதி மன்றத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர், அல்லது அத்தகைய கடமைகளில் ஒன்றை நிறைவேற்றுவதற்காக நீதிமன்றத்தால் நியமிக்கப்படுபவர்.
4. ஜூரி, அஸசர், நீதிமன்றத்துக்கு அல்லது வேறு பொது ஊழியருக்கு துணை புரியும் பஞ்சாயத்தாரர்.
5. Jury (ஜூரி) அரசு நீதி மன்றத்திற்கு அல்லது பொது ஊழியருக்கு உதவி புரியும் பஞ்சாயத்தாரர்.
6. நீதிமன்றத்தால் ஒரு விவகாரத்தைப் பரிசீலிக்க நியமிக்கப்பட்ட நடுவர்.
7. தான் ஏற்று இருக்கும் அலுவல் காரணமாக யாரையேனும் காவலில் வைத்திருக்கும் அதிகாரம் பெற்றவர்கள்.

8. குற்றங்களைத் தடுப்பதற்கும், குற்றங்கள் பற்றிய தகவல்களைக் கொடுப்பதற்கும், குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன் கொண்டு வருவதற்கும், பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் அரசால் நியமிக்கப்பட்ட அனைவரும் பொது ஊழியர் ஆவார்.

9. சொத்தை எடுக்க, விற்றுக்கொள்ள, வைத்திருக்க, செலவீடு செய்யக் கடமைப்பட்ட அலுவலர்.

10. ஒரு கிராமத்தின், நகரத்தின், மாவட்டதின் பொதுக்காரியத்துக்காக வரி விதித்தல், அளத்தல், மதிப்பீடு செய்தல் அல்லது ஒரு கிராமத்தின், நகரத்தின் அல்லது மாவட்டதின் மக்களுடைய உரிமைகளை நிர்ணயிப்பதற்காகத் தேவைப்படும் ஆவணங்களை உண்டாக்க அல்லது அதிகார பூர்வமாக வைத்திருக்கக் கடமைப்பட்டுள்ளவர் ஒவ்வொருவரும்..

11. தேர்தல் சம்பந்தமான அலுவல் செய்பவரும் பொது ஊழியர் ஆவார்.

12. அரசிடம் பொது ஊழியத்திற்காகக் சம்பளம் அல்லது சன்மானம் பெறும் ஒவ்வொருவரும், மத்திய, மாநில சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட நிறுவனங்களின் ஊழியத்திற்காகப் பணிபுரியும் அனைவரும் பொது ஊழியர் ஆவார்.

பிரிவு — 22

## அசையும் பொருட்கள்

பூமியும், பூமியுடன் இணைக்கப்பட்டுள்ள பொருட்களையும் அல்லது நிரந்தரமாக பூமியுடன் இணைக்கப்பட்டுள்ள பொருட்களுடன் பிணைக்கப்பட்ட பொருட்களையும் தவிர மற்ற எல்லா பொருட்களும் அசையும் பொருட்கள் என்று சொல்லப்படும்.

பிரிவு — 23

## சட்டவிரோதமான, ஆதாயம், சட்ட விரோதமான இழப்பு

## Wrongful Gain, Wrongful Loss

சட்ட விரோதமான ஆதாயம் என்பது சட்ட பூர்வமாக உரிமையில்லாத ஒரு சொத்தை சட்டவிரோதமாக அடையும் ஆதாயமாகும்,

சட்ட விரோமான இழப்பு என்பது ஒரு சொத்தை சட்ட விரோதமான முறையில் இழந்தால் அதற்கு சட்ட விரோதமான இழப்பு என்று பெயர்.

பிரிவு — 24

## நேர்மையின்மை

## Dishonesty

ஒருவன் மற்றொருவனுக்கு அநியாய இலாபம் அடைவதற்கும் அல்லது அநியாய நஷ்டம் ஏற்படுத்துவதற்கும் உள்கருத்துடன் ஒரு காரியம் அவன் நேர்மையின்றி காரியம் புரிவதாக கொள்ளப்படும்.

பிரிவு — 25

## மோசடி

ஒருவர் மற்றொருவரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு காரியம் செய்யும்பொழுது மோசடி செய்வதாக கொள்ளப்படும்.

பிரிவு — 26

**நம்பத்தகுந்த காரணம்**

## Reason to believe

ஒரு விசயத்தை நம்புவதற்கு ஏற்ற ஒரு காரணம் இருந்தால் அதனை நம்பத்தகுந்த காரணம் என்று சொல்லப்படும்.

பிரிவு - 27

**மனைவி, குமாஸ்தா அல்லது வேலைக்காரனிடம் உள்ள சொத்து**

## Property in possession of Wife, Clerk or Servant

ஒரு சொத்து ஒரு நபரின் மனைவி, குமாஸ்தா அல்லது வேலைக்காரனிடம் இருந்தால் அந்த சொத்து அந்த நபரிடம் இருந்ததாகவே இந்தச் சட்டப்படி கருதப்படும்.

பிரிவு -28

**போலியாகச் செய்தல்**

## Counterfeit

ஒருவன் ஒரு பொருளைப் போலவே மற்றொரு பொருளை போலியாக செய்து அதன் மூலம் பிறரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் அல்லது அதன் மூலம் பிறர் ஏமாற்றப்படுவர் என்று அறிந்திருந்தும் அத்தகைய போலி உற்பத்தியில் ஈடுபடுவதை போலியாக செய்தல் எனப்படும்.

பிரிவு — 33

**செயல் செய்யாது இருத்தல்**

## Act of ommission

ஒரு செயலை மட்டுமின்றி பல செயல்களையும் இது குறிக்கம். அதே போன்று செய்யாது விடுத்தாலும் ஒன்றில்லாமல் பலவற்றையும் குறிக்கும்.

பிரிவு — 34

**கூட்டு நோக்கம்**

## Common intention

ஒரு குற்ற செயலை கூட்டு நோக்கோடு புரியும்போது ஒவ்வொருவரும் தன்னந்தனியாக அந்த குற்றத்தை புரிந்தவராகவே கருதப்படும்.

பிரிவு — 39

**தன்னிச்சைப்படி**

## Voluntarily

ஒரு முடிவை கருத்தில் கொண்டு ஒரு செயல் செய்யப்படுகின்றது. செய்பவனுக்கு அதன் விளைவு என்னவென்று தெரியும். அல்லது என்ன நடக்கும் என்பதை பற்றிய தெளிவு அவனுக்கு இருக்கும். அப்படி ஒருவன் தான் நினைத்த விளைவை பெறவேண்டும் என்று ஒரு காரியம் ஆக்கும் போது அவனை தன்னிச்சைப்படி காரியம் செய்வதாக கருதப்படும்.

பிரிவு — 44

## துன்பம்
## Injury

சட்டத்திற்கு முரணான ஒருவருடைய உடல் மற்றும் மனம், புகழ் அல்லது சொத்துக்கு இழைக்கப்படும் தீங்கை குறிக்கும்.

பிரிவு — 45

## உயிர்
## Life

உயிர் என்பது மனித உயிரையே குறிக்கும். வேறு பொருள் கொள்ள வேண்டிய இடங்களில் அதற்கான விளக்கம் தனியாக தரப்பட்டுள்ளது.

பிரிவு — 46

## மரணம்
## Death

வேறு வகையான விளக்கம் தரப்பட்டாலன்றி மரணம் என்பது மனிதனுடைய மரணத்தையே குறிக்கும்.

பிரிவு — 52

## நல்லெண்ணம்
## Good Faith

அக்கறையுடனும், கருத்துடனும் செய்யக்கூடாத எதையும் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாக கொள்ள முடியாது. அதே போல அக்கறையுடனும் கருத்துடனும் பரிசீலித்து நம்பிக்கைக்கு உரியதாக கொள்ள தகாதவற்றை நல்லெண்ணத்துடன் செய்ததாக கூற முடியாது.

# அத்தியாயம் - 3
# (CHAPTER - 3)

## பொது விதிவிலக்கு

## (General Exceptions)

பிரிவு– 76

### குற்றம், குற்றமாகாத சந்தர்ப்பங்கள்

## Act done by a person bound or by mistake of fact believing himself bound bylaw

சட்டத்தின் மூலம் ஒரு காரியத்தை செய்ய வேண்டிய கடமை உள்ள ஒருவர் அப்படி கடமையாற்றும் பொழுது நல்லெண்ணத்துடன் ஒரு காரியத்தை அத்தகைய நல்லெண்ணத்துடன் தவறாக செய்தாலும் குற்றமாகாது.

***உதாரணம் :***

மேலதிகாரிகளின் உத்திரவுப்படி ஒரு போலிஸ்காரர் ஒரு கூட்டத்தில் மீது துப்பாக்கி பிரயோகம் செய்கிறார். அவர் மீது எந்த குற்றமும் சாராது.

ஒரு நீதிமன்றத்திற்கு உத்திரவு பெற்ற அதிகாரிக்கு ராமனை கைது செய்ய வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது. ஆனால் அவர் தவறுதலாக ராமன் என்று நினைத்துக் கொண்டு முனியனை கைது செய்துவிட்டால் அது குற்றமாகாது.

பிரிவு - 77

சட்டம் தனக்கு வழங்கியுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி ஒருவரை நீதிபதி தண்டிக்கிறார். தனக்கு ஒரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற நல்லெண்ணத்துடன் தண்டனை கொடுக்கலாம். அதற்காக அந்த நீதிபதியை குற்றம்சாட்ட முடியாது.

பிரிவு - 78

ஒரு உத்திரவு அல்லது தீர்ப்பு நீதிமன்றத்தால் வெளியிடப்படுகிறது. அந்த தீர்ப்பு அல்லது உத்திரவு அமுலில் இருக்கும் போது அதனை ஒட்டி செய்யப்படும் காரியங்கள் குற்றம் என்று கொள்ள முடியாது. அந்த நீதி மன்றத்திற்கு அத்தகைய தீர்ப்பு அல்லது உத்திரவை தருவதற்கு போதுமான அதிகாரம் கூட இல்லாதிருக்கலாம். உத்திரவின்படி நடப்பவர் நீதிமன்றத்திற்கு அத்தகைய அதிகாரம் இருக்கிறது என்ற நல்லெண்ணத்துடன் செயல்படுவதால் அந்த செயல் குற்றமாவதில்லை.

பிரிவு — 79

சட்டத்தின் கீழ் உரிமைப்பெற்று கடமையாற்றுவோர் நல்லெண்ணத்துடன் தவறுதலாக ஒரு காரியத்தை சரியானது என்று எண்ணி குற்றம் புரிந்திருந்தால் அதுவும் குற்றமாகாது.

***உதாரணம் :***

ராமனுக்கும் கோவிந்தனுக்கும் ஏற்பட்ட சண்டையில் தன்னை காப்பாற்றி கொள்ள கோவிந்தனை ராமன் கொல்ல நேரிடுகிறது. இந்த நிலையில் ராமனை குற்றவாளி ஆக்க முடியாது. இருப்பினும் அதை கண்ட ராஜு தன்னுடைய கடமையை செய்வதாக நினைத்துக் கொண்டு நல்ல எண்ணத்துடன் ஒரு குற்றவாளியைப் போல் ராமனை நினைத்து கைது செய்து அதிகாரி முன்னால் கொண்டு வருகிறான். இங்கே ராஜு ஒரு குற்றமும் புரியவில்லை.

பிரிவு– 80

சட்ட ரீதியான முறையில் சட்ட ரீதியான வழிகளைப் பற்றி சட்டத்திற்கு உட்பட்ட ஒரு காரியம் கருத்துடனும் கவனத்துடனும் நடைபெறுகின்றது. அப்படி காரியம் ஆக்கும்போது குற்ற கருத்தும் குற்றத்தைப்பற்றி தெளிவும் இல்லாமல் எதிர்பாராத விதமாக நிகழும் விபத்து அல்லது துன்பத்தை குற்றமாக கொள்ளப்படமாட்டாது.

***உதாரணம் :***

ராமன் மரம் வெட்டிக்கொண்டிருக்கிறான். கோடாரியின் முனை திடீரென்று வழுக்கி போய் பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் மனிதனை தாக்கி கொன்று விடுகிறது. ராமனுடைய அஜாக்கிரதையினால் அந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை என்றால் ராமனுடைய செயல் குற்றமற்றது.

## பிரிவு — 81

ஒருவருக்கு தீங்கு இழைக்க வேண்டும் என்ற குற்ற கருத்து இல்லாமல், நல்லெண்ணத்துடன் ஒரு மனிதர் அல்லது சொத்துக்கு தீங்கு ஏற்படுவதை தடுக்க அல்லது தவிர்க்க ஒரு காரியம் நடைபெறுகிறது. அப்போது தீங்கு ஏற்படும் என அறிந்தும் அந்த காரியத்தை செய்து தீங்கு நிகழ்ந்தால் அது குற்றமாகாது.

***உதாரணம் :***

தீ பற்றி வீடுகள் எரியும் போது தீ பரவாமல் தடுப்பதற்காக பக்கத்தில் உள்ள வீடுகளை கிருஷ்ணன் பிரித்து தள்ளுகிறான். மனித உயிர்களையும் சொத்துக்களையும் காப்பாற்றவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இந்த காரியம் செய்யப்படுகிறது. அபாயத்தை தடுப்பதற்காக கிருஷ்ணன் அக்கம் பக்கத்து வீடுகளை பிரித்தது சரி என்றால் அவன் மீது குற்றம் சுமத்த முடியாது.

## பிரிவு - 82

7 வயதுக்குட்பட்ட குழந்தை எந்த காரியத்தை செய்தாலும் அது குற்றம் ஆகாது.

## பிரிவு — 83

தன்னுடைய நடவடிக்கைகளின் காரண காரியங்களை புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு அறிவு முதிர்ச்சி பெறாத 7 வயதுக்கு மேல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் செய்ததை குற்றம் என்று கொள்ள முடியாது.

## பிரிவு — 84

சித்தசுவாதீனமற்ற நிலையில் தான் செய்வது என்னவென்று புரிந்துகொள்ள முடியாத நிலையில் ஒருவர் புரியும் செயல் குற்றமாகாது.

## பிரிவு - 85

மது போதை ஊட்டப்பட்ட ஒருவர் தான் செய்வதை இன்னதென்று பகுத்தறிய முடியாத சூழ்நிலையில் செய்யக்கூடிய எதனையும் குற்றமாக கொள்ள முடியாது. ஏனெனில் தான் செய்யும் காரியம் சட்டத்திற்கு உட்பட்டதா அல்லது சட்டத்திற்கு எதிரானதா என்பதனை அவரால் அப்போது அறிய முடியாது. இதில் உள்ள ஒரு முக்கியமான நிபந்தனை என்னவென்றால் மது போதையை அவருடைய விருப்பத்திற்கு விரோதமாக பிறர் ஊட்டி இருக்க வேண்டும். அல்லது உண்ட பொருள் போதை தர தக்கது என்பதை அவன் அறியாது உண்டு இருக்க வேண்டும்.

# அத்தியாயம் - 4
# (CHAPTER – 4)

## தற்காப்பு உரிமை

## Right of Private Defence

இந்த அத்தியாயத்தில் Section 96 முதல் 106 வரை தற்காப்பு உரிமைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

### பிரிவு — 96

சில நேரங்களில் நம்மை பிறரிடமிருந்து காப்பாற்றி கொள்வதற்காக சில காரியங்களை செய்ய வேண்டி இருக்கிறது. அதனால் பிறருக்கு தீங்கு கூட ஏற்படலாம். அந்த தீங்கு சொத்துக்கு நஷ்டம் உண்டாக்குவதற்காகவோ உடலுக்கு காயம் விளைவிப்பதற்காகவோ அல்லது தவிர்க்க முடியாத நேரத்தில் மரணம் சம்பவிக்க கூடியாதகவோ கூட அமையலாம். ஆனால் அத்தகைய செயலை தண்டனைக்குரிய குற்றமாக கருத முடியாது.

ஆனால் அதற்கும் ஒரு வரையரை உண்டு. நம்மை தேடி கொண்டு ஒருவன் தாக்க வரும்போது அவன் கையிலுள்ள தடியை பிடுங்க முயற்சி செய்யலாம். அவனை அப்போது தடியால் தாக்கி அவனுடைய கையிலுள்ள தடியை பிடுங்க செய்யலாம். இது குற்றமாகாது. ஏனெனில் நம்மை காப்பாற்றிக் கொள்ள அவ்வாறு செய்கிறோம். ஆகவே அந்த செயல் குற்றமாகாது.

ஆனால் தற்காப்பு என்ற பெயரால் தடிகொண்டு தாக்க வருபவனை எதிர்த்து அரிவாளால் தாக்குவது சரியில்லை. அவசியமும் அல்ல.

ஓர் எதிரியிடமிருந்து நம்மை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்கிற அவசியம் ஏற்படும் பொழுது நமக்கு வரும் ஆபத்தை தவிர்க்க எந்த அளவுக்கு வன்முறையை கையாள வேண்டுமோ அந்த அளவுக்கு மேல் அத்துமீறி கையாளக் கூடாது, அப்படி அத்து மீறும் போது நாம் செய்யும் காரியம் தண்டனைக்குரிய குற்றமாகிறது.

நம்மால் பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்கு கொடுமையான துன்பத்தை எதிரி செய்ய முற்படும்பொழுது அவன் கொலை செய்து விட்டாலும் குற்றமாகாது. தற்காப்பின் நிமித்தம் செய்யப்பட்ட காரியமாகவே அந்த கொலை கருதப்படும்.

ஏனெனில் எதிரி, நமக்கு இழைக்கும் கொடுமையால் பொங்கி எழுந்து உணர்ச்சி வசப்பட்ட சூழ்நிலையில் எதிரியை திருப்பி தாக்க நேரிடலாம். அத்தகைய தாக்குதலின் விளைவாக காயமடைந்த எதிரி மரணமடைய கூடும். அந்த மரணம் தற்காப்பின் விளைவாக நேரிட்டது என்றால், அதற்கு தண்டனை இல்லை. ஏனெனில் 96-வது பிரிவின்படி தற்காப்புக்கு என்று செய்யப்படும் எந்த காரியமும் தண்டனைக்குரிய குற்றமாகாது.

### பிரிவு - 97

## உடலையும், உடமையையும் தற்காத்து கொள்ளும் உரிமை

## Right of Private Defence of the Body and of Property

ஒவ்வொரு நபருக்கும் தன்னுடைய உடலையும், பிறருடைய உடலையும் தாக்க கூடிய குற்றங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் உரிமை உண்டு. இரண்டாவதாக தன்னுடைய சொத்துக்களையும், பிறருடைய சொத்துக்களையும் பாதிக்க கூடிய குற்றங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் உரிமை உண்டு (சொத்து என்பது அசையும் பொருட்களையும், அசையாத பொருட்களையும் குறிக்கும் திருட்டு, கொள்ளை சொத்துக்களை அழித்தல், வரம்பு மீறி ஆளுதல் ஆகியவை சொத்துக்களை சம்பந்தப்பட்ட குற்றமாகும்).

பிரிவு – 98

## Right of Private Defence against the Act of Person of a Unsound Mind etc.

திறமையின் காரணமாகவும் அறிவு தெளிவடையாத காரணத்தினாலும் புத்தி சுவாதீனமில்லாததாலும்,, போதையின் விளைவாகவும் ஒருவர் புரியும் குற்றச்செயலை குற்றமாக கருத இயலாவிட்டாலும் அத்தகைய நபர்களிடமிருந்து, நம்மை காப்பாற்றி கொள்ளும் உரிமை நமக்கு இருக்கிறது.

***உதாரணம்:***

புத்தி சுவாதீனமில்லாமல் ராஜன், ராமசாமியை கொலை செய்ய முயற்சி செய்கிறார். ராஜன் மீது குற்றம் சாட்ட முடியாது. இருப்பினும் ராஜனிடமிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக ராமசாமி என்ன செய்தாலும் அதனை குற்றமாக கொள்ள முடியாது.

பிரிவு – 99

## தற்காப்புரிமை இல்லாமல் போகும் சந்தர்ப்பங்கள்
## Act against which there is no right of private defence

ஒரு பொது ஊழியர் நல்லெண்ணத்துடன் செய்யும் அல்லது செய்ய முயற்சி செய்யும் காரியத்தை எதிர்த்து தற்காப்பு உரிமையை பிரயோகிக்க முடியாது, அப்படி தற்காப்பு உரிமையை பிரயோகிக்க வேண்டுமென்றால், அந்த பொது ஊழியரின் செயலால் மரணம் அல்லது கொடுங்காயம் ஏற்படக்கூடும் என்ற நியாயமான உணர்வு எழவேண்டும்.

பொது ஊழியரின் செய்கை சட்டப்படி முறையற்றதாகக் கூட இருக்கலாம். இருப்பினும் அவரை எதிர்க்கத் தற்காப்பு உரிமையைப் பயன்படுத்தக்கூடாது.

அதே போல் நல்லெண்ணத்துடன் செயல்படும், ஒருவரின் ஆணையின் கீழ் நடைபெறும் காரியத்தையும் எதிர்க்க முடியாது. அந்தக் காரியம் சட்ட வரம்புக்கு அப்பாற்பட்டதாக இருப்பினும் எதிர்க்க முடியாது. அப்படித் தற்காப்பு உரிமையைப் பயன்படுத்தி எதிர்க்க வேண்டுமென்றால். அந்தச் செயலின் மூலம் மரணம் அல்லது கொடுங்காயம் சம்பவிக்கக் கூடும் என்ற நியாய பூர்வமான அச்சம் ஏற்பட வேண்டும்.

அதே போன்று அந்தச் செயலை எதிர்த்து அரசாங்க அதிகாரிகளின் உதவியையும் பாதுகாப்பையும் நாடிப்பெறுவதற்கான அவகாசம் இருக்கும் போதும் தற்காப்பு உரிமையைப் பயன்படுத்தல் ஆகாது.

தற்காப்பு உரிமையை எல்லை மீறிப் பயன்படுத்தக்கூடாது. தற்காப்புக்காகத் தாக்க நேரிட்டால் அளவுக்கு மீறித் தீங்கு உண்டாக்கக் கூடாது. தன்னைக் காத்துக் கொள்ள எந்த அளவுக்குத் தாக்குதல் நடத்தல் வேண்டுமோ அதற்கு மேல் சென்று தாக்குதல் நடத்தக் கூடாது.

### *Explanation:*

1. காரியத்தை செய்பவர் பொது ஊழியர் என்று தெரியாமல் தற்காப்பு உரிமையை பயன்படுத்தி இருந்தால் அது தவறாகாது.

2. அதே போல பொது ஊழியரின் ஆணைப்படி ஒரு காரியம் செய்யப்படுகிறது என்பதை அறியாமல் தற்காப்பு உரிமையை பயன்படுத்தினால் அது குற்றமாகாது.

பிரிவு — 100

## தற்காப்பு உரிமையைப் பயன்படுத்தும் காலத்து இறப்பு ஏற்படும் சந்தர்ப்பங்கள்

## When the right of Private Defence of the body extends to causing Death

அடியில் சொல்லப்பட்ட நேரங்களில் நம்மை நாமே தற்காத்துக்கொள்ளும் பொருட்டுச் செய்யப்படும் காரியத்தால் எதிரிக்கு மரணம் சம்பவித்தாலும் அல்லது வேறு ஏதாவது கெடுதல் நேரிட்டாலும் அதனைக் குற்றமாகக் கொள்ள முடியாது அந்தச் சந்தர்ப்பங்களாவன,-

1. நம்மை எதிரி தாக்கி கொலை செய்யக் கூடும் என்ற அச்சம் ஏற்படும் போது;
2. நம் உடலுக்கு எதிரியின் செயலால் கொடுங்காயம் ஏற்படலாம் என்ற எண்ணம் தோன்றும் போது;
3. கற்பழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எதிரி தாக்கும் போது;
4. இயற்கைக்கு மாறான முறையில் தன்னுடைய காம இச்சையை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற வெறியுடன் எதிரி நெருங்கும் போது;
5. கடத்தி செல்லவேண்டும் என்ற கருத்துடன் நம்மை அண்டி உள்ளவரை எதிரி தாக்க முனையும் போது;
6. சட்ட விரோதமாக ஒருவரை எதிரி காவலில் வைப்பதற்கு என முயற்சிசெய்து அதிலிருந்து சட்டபூர்வமாக அதிகாரிகளை அணுகி விடுதலை பெறமுடியாத நிலை ஏற்படும் போது, இந்த சந்தர்ப்பங்களில் புரியப்படும் செயலை குற்றமாக கொள்ள முடியாது.

பிரிவு - 101

## எதிரிக்கு தற்காப்புரிமையை பயன்படுத்தும்போது மரணம் ஏற்படுத்தக் கூடாத சந்தர்ப்பங்கள்

## When such right extends to causing any harm other than Death

மேலே குறிப்பிட்டுள்ள பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள குற்றங்களில் ஒன்றை எதிரி செய்ய முற்படும் போது மட்டும் தற்காப்புக்கென திரும்பி தாக்குவதால் எதிரிக்கு மரணம் ஏற்பட்டாலும் அதனை குற்றமாக கொள்ள முடியாது, மற்ற சமயங்களில் 99-வது பிரிவில் கூறியுள்ளபடி மரணத்தை தவிர வேறு எத்தகைய தீங்கு நேர்ந்தாலும் குற்றமாகாது. அப்படி மீறி மரணமடைந்தால் அத்தகைய மரணத்தை தற்காப்புக்கென செய்யப்பட்ட மரணம் என்று கொள்ளப்பட மாட்டாது.

பிரிவு — 102

## தற்காப்பு உரிமை ஆரம்பிக்கும் மற்றும் நீடிக்கும் காலம்

## Commencement and continuance of the right of Private Defence of the Body

நம்முடைய உடலுக்கு ஆபத்து ஏற்பட போகிறது என்ற அச்சம் எப்போது நமக்கு தோன்றுகிறதோ அந்த நேரத்திலிருந்து நம்மை தற்காத்து கொள்ளும் உரிமையும் நமக்கு கிடைக்கிறது.

நம் உடலுக்கு தீங்கு செய்யக்கூடிய குற்றத்தை எதிரி புரியாவிட்டாலும் புரிவதற்கான முயற்சியை அல்லது மிரட்டலை அவன் மேற்கொண்டாலே போதும். நம்மை பாதுகாத்து கொள்ளும் நடவடிக்கையை நாம் உடனே மேற்கொள்ளலாம்..

பிரிவு — 103

## சொத்துக்கு அழிவு ஏற்படும்போது தற்காப்பு உரிமையை பயன்படுத்துவதால் மரணம் ஏற்படும் சந்தர்ப்பங்கள்

## When the right of Private Defence of property extends to causing Death

நமது சொத்துக்களை கொள்ளை அடிக்கவரும் போதும், இரவு நேரத்தில் வீட்டை இடித்து, உடைத்து உள்ளே நுழைய எத்தனிக்கும் போதும், தீ வைத்து சொத்துக்களை அழிக்க முனையும்போதும், திருடுவதற்காக அல்லது தொல்லை தருவதற்காக அத்துமீறி நம்மிடத்தில் நுழைய முயற்சி செய்யும்போதும் அந்த முயற்சியால் நமக்கும் நம்மை அண்டியுள்ளவர்களுக்கும் மரணம் சம்பவிக்கலாம், என்ற அச்சம் ஏற்படும்போதும், அத்தகைய எதிரியை நாம் தாக்கி, அதனால் எதிரிக்கு மரணம் சம்பவித்தாலும் அதனை குற்றமாக கொள்ள முடியாது. அந்த செயல் தற்காப்புக்காக செய்யப்பட்டதாகவே கருதப்பட வேண்டும்.

பிரிவு — 104

## சொத்துக்கு அழிவு ஏற்படும்போது தற்காப்புரிமையைப் பயன்படுத்துவதால் மரணம் ஏற்படக்கூடாத சந்தர்ப்பங்கள்

## When such right extends to causiong any harm other than Death

மேலே குறிப்பிட்டுள்ள குற்றங்களன்றி திருட்டு, தொல்லை தருதல், வரம்பு மீறல் ஆகிய குற்றங்களை பிறர் செய்தாலும், செய்ய முயற்சி செய்தாலும் தற்காப்புக்கு என்று முயற்சி செய்தாலும் தற்காப்புக்கு என்று மரணத்தை தவிர வேறு எந்த தீங்கை வேண்டுமானாலும் எதிரிக்கு செய்யலாம். வேண்டுமென்றே மரணம் சம்பவிக்கும்படி மட்டும் செய்யக்கூடாது.

பிரிவு — 105

## சொத்துக்கு தற்காப்புரிமை ஏற்படும் மற்றும் நீடிக்கும் காலம்

## Commencement and continuance of the right of private defence of Property

எப்போதும் நம்முடைய சொத்துகளுக்கு ஆபத்து என்ற பயம் உண்டாகிறதோ அப்பொழுதே நம்முடைய சொத்தினைப் பாதுகாக்கும் உரிமையும் நமக்குக் கிடைக்கின்றது.

நமது சொத்தைத் திருட வரும் பொழுது, திருடனிடமிருந்து நமது சொத்தை மீட்கும் வரையில் நமக்கு அந்த உரிமை இருக்கிறது. அல்லது அவற்றை மீட்க அதிகாரிகளின் உதவி நமக்குக் கிடைக்கும் வரையில் அந்த உரிமை இருக்கிறது.

அதேபோல் சொத்துக்களைக் கொள்ளை அடிப்பதற்காக வரும்போதும் கொள்ளையடிக்க முயற்சி செய்யும்போதும் மரணம் அல்லது தவறாகத் தடை செய்யும் அபாயம் ஏற்படும் பொழுதும், அத்தகைய அபாய நிலை அல்லது உணர்வு நீங்கும் வரையில் நமக்குத் தற்காப்பு உரிமை இருக்கின்றது.

அதே போல் குற்றவாளி அத்துமீறி நுழைதல், சொத்துக்களை அழித்தல் ஆகிய குற்றங்களைத் தொடர்ந்து புரியும்வரை நமக்குத் தற்காப்பு உரிமை இருக்கின்றது.

பிரிவு — 106

## தற்காப்பு உரிமையை கையாளும் போது நம் அருகில் இருப்பவருக்கு ஆபத்து ஏற்படுத்துதல்

## Right of private defence against deadly assault when there is risk of harm to innocent person

மரணத்தைப் பற்றிய அச்சத்தை உண்டாக்கக் கூடிய தாக்குதலிலிருந்து நம்மை நாம் தற்காத்துக்கொள்ளும் முயற்சியில் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் நிரபராதியான மற்றொருவருக்குத் தீங்கு ஏற்பட்டாலும் அந்த செயல் குற்றமாகாது.

***உதாரணம்:***

அமர்சிங்கைக் கொலை செய்யும் நோக்கத்துடன் ஒரு கூட்டம் தாக்க முற்படுகின்றது. கூட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யாமல் தப்பிக்க முடியாது. ஆனால் அப்படித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் பொழுது கூட்டத்தில் கலந்துள்ள குழந்தைகளுக்குத் தீங்கு நேரிடலாம். தற்காப்புக்கென அந்தக் கூட்டத்தை நோக்கிச் சுடுவதால், அந்தக் குழந்தைகளுக்குத் தீங்கு ஏற்பட்டாலும் அமர்சிங் மீது குற்றம் சுமத்த முடியாது.

# அத்தியாயம் - 8
# (CHAPTER – 8)

## பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் குற்றங்கள்
## Offences against the Public Tranquility

நாட்டில் அரசாங்கம் நல்லமுறையில் நடக்கவேண்டுமெனில் பொது அமைதி பாதுகாக்கப்பட வேண்டும். அமைதியின்மையும், வன்முறைச் செயல்களும் ஜனநாயக ரீதியிலான அரசாங்கத்திற்கு எதிரான அராஜகவாதிகளின் பலத்தை குவித்து நீதியாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தை நிலைகுலையச் செய்துவிடும். எனவே பொது அமைதியைக் காப்பதற்குச் சட்டபூர்வமான நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. அமைதியைக் குலைக்க முற்படுவோரைக் கண்டித்து தண்டிக்கவேண்டியது அவசியமாகிறது. ஆகவே, பொது அமைதிக்கு எதிரான குற்றங்களையும் அவற்றிற்கு வழங்கப்படும் தண்டனைகளையும் இனி கவனிப்போம்.

பிரிவு — 141

## சட்ட விரோதமான கூட்டம்
## Unlawful Assembly

1. மத்திய அரசை அல்லது மாநில அரசை வன்முறைச் செயல்களாலும் அச்சுறுத்தல்களாலும் தத்தம் கடமையினைச் செய்யவிடாமல் தடுப்பது;
2. சட்ட பூர்வமாக நிலைநாட்டப்பட்ட ஒழுங்கை அல்லது நடவடிக்கையை எதிர்ப்பது;
3. அத்துமீறி நுழைதல், சொத்துக்களை அழித்தல், வேறு குற்றங்களைச் செய்தல்;
4. மற்றவர்களின் தனி உரிமைகளை வன்முறைச் செயல்களினாலோ அல்லது அச்சுறுத்தல் நடவடிக்கைகளினாலோ தடுப்பது, பழிப்பது மறுப்பது;

5. வன்முறைச் செயல்களின் மூலம் செய்யக்கூடாத காரியத்தைச் செய்யும்படி பிறரைக் கட்டாயப்படுத்துவது;

ஆகிய குற்றங்களை ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து செயல்படுத்தும் போது அந்தக் கூட்டத்தைச் சட்ட விரோதமான கூட்டம் என்று குறிப்பிடுகிறோம்.

பிரிவு — 142

## சட்ட விரோதமான கூட்டத்தில் உறுப்பினராதல்
## Being member of Unlawful Assembly

சட்ட விரோதமாகக் கூடிய கூட்டம் என்று அறிந்து பின்னரும் அந்தக் கூட்டத்தை விட்டு விலகிச் செல்லாமல் அந்த கூட்டத்தில் சேர்ந்திருக்கும் ஒவ்வொருவரும் சட்ட விரோதமான கூட்டத்தைச் சேர்ந்தவராகவே கருதப்படுவார்கள்.

பிரிவு — 143

## சட்ட விரோதமான கூட்டத்தில் சேர்ந்திருப்பதற்கான தண்டனை
## Punishment

அத்தகைய சட்ட விரோதமான கூட்டத்தில் இருப்பவர்களுக்கு ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைக்காவலுடன் கூடிய அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 144

## சட்ட விரோமான கூட்டத்தில் பயங்கரமான ஆயுதத்துடன் இருப்பதற்கான தண்டனை
## Joining Unlawful Assembly armed with Deadly Weapon

சட்ட விரோதமான கூட்டத்தில் பயங்கரமான ஆயுதங்கள் அல்லது மரணத்தை விளைவிக்கத்தக்க ஆயுதங்களுடன் செல்வோருக்கு இரண்டு ஆண்டுகள்வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது சிறைக்காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 145

## கலைந்து செல்லும்படி உத்தரவிட்டும் சட்ட விரோதமான கூட்டத்தில் இருப்பதற்கான தண்டனை
## Joining or continuing unlawful assembly knowing it has been commanded to Disperse

சட்ட விரோதமாகக் கூடியுள்ள கூட்டத்தைக் கலைந்து செல்லுமாறு போலீசார் உத்தரவிடலாம். அந்த உத்தரவுக்குப் பிறகும் கலையாமல் இருக்கும் சட்டவிரோதமான கூட்டத்தைச் சேர்ந்தவருக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது சிறைக்காவலுடன் கூடிய அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 146

### கலகம்

## Rioting

சட்ட விரோதமான கூட்டம் தனது பொதுவான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வன்முறைச் செயல்களில் ஈடுபடும்பொழுது அந்தக் கூட்டம் கலகம் செய்ததாகக் கொள்ளப்படும்.

பிரிவு – 147

### கலகம் செய்ததற்கான தண்டனை

## Punishment for rioting

கலகம் செய்யும் சட்ட விரோமான கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு உட்பட்ட சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது சிறைக்காவலுடன் கூடிய அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 148

### பயங்கர ஆயுதங்களுடன் கலகம் செய்ததற்கான தண்டனை

## Rioting armed with Deadly Weapon

கலகம் செய்யும் சட்டவிரோதமான கூட்டத்தில் பயங்கரமான ஆயுதம் அல்லது மரணத்தை உண்டாக்கக்கூடிய ஆயுதத்தை வைத்திருந்தால் மூன்று ஆண்டுகள் வரை சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது சிறைக்காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 149

### சட்ட விரோதமான கும்பலில் உள்ள ஒவ்வொருவருக்கும் தண்டனை

## Every member of Unlawful Assembly guilty of offence committed in prosecution of common object

சட்டவிரோதமான கூட்டத்தைச் சேர்ந்த நபர்களில் யார் எந்தக் குற்றத்தைப் புரிந்தாலும் அப்பொழுது அந்தச் சட்டவிரோமான கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவருக்கும் அந்தக் குற்றத்தில் நேரடிப் பங்கு உண்டு. அவர்கள் அதற்கேற்ற தண்டனையைப் பெறவேண்டும்.

பிரிவு – 152

### கலக கூட்டத்தை அடக்க முற்படும்போது பொது ஊழியரை தாக்குவது அல்லது தடுப்பதற்கான தண்டனை

## Assaulting or Obstructing Public Servant when suppressing riot, etc.

ஒரு கலகத்தை அடக்க முற்படும் அரசாங்க அதிகாரியை எதிர்ப்போர், தடுப்போர், எதிர்த்து வன்செயல்புரிவோர் ஆகியோருக்கு மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது சிறைக்காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 153

### கலகம் செய்வதற்கு தூண்டிவிடுவதற்கான தண்டனை, கலகம் நடந்தாலும்,

### நடக்கா விட்டாலும்

## Wantonly giving Provocation, with intent to cause Riot, if Rioting be Committed, if Not -committed

கலகம் செய்வதற்குத் தூண்டி விட்டு அதனால் கலகம் ஏற்பட்டால் அந்தக் கலகத்தைத் தூண்டியவருக்கு ஓர் ஆண்டுக்கு மேற்படாத சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது சிறைவாசம் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

தூண்டுதலின் விளைவாகக் கலகம் ஏற்படாவிட்டாலும் கலகத்தை தூண்டியவருக்கு ஆறு மாதங்கள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது சிறைக் காவலுடன் கூடிய அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 153 - A

### சாதி, மத, இன மொழி, சமயம் சம்பந்தமாக விரோத உணர்ச்சிகளை தூண்டிவிடுதல்

## Promoting enmity between Different Groups on grounds of Religion Race, place of birth Residence, Language, etc., and doing acts Prejudicial to maintenance of Harmony

1. (a) பேச்சாலோ, எழுத்தாலோ அல்லது சைகையாலோ மத, இன, மொழி சாதி, சமய சம்பந்தமான விரோத உணர்ச்சிகளை தூண்டிவிட முயற்சி செய்வது குற்றமாகும்..

   (b) அத்தகைய விரோத உணர்ச்சிகளால் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துவதும் குற்றமாகும்.

   (c) குற்றம் என்று கருதக்கூடிய வன்முறை அல்லது வன்செயலை பயன்படுத்தும் கருத்துடன் அல்லது பயன்படுத்த பயிற்சி அளிக்கும் கருத்துடன் அல்லது சாதி, சமூகம், இனம், மதம், மொழி அல்லது வட்டாரக் குழு எதற்கும் விரோதமான வன்முறை அல்லது வன்செயலை பயன்படுத்தக்கூடிய பயிற்சி இயக்கம் உடற்பயிற்சி அல்லது அத்தகைய நடவடிக்கைகளில் பங்கு பெறுவோர் அநேகமாக பயன்படுத்த பயிற்சி அளிக்கக்கூடிய நடவடிக்கையாக அவை இருக்கின்றன என்று அறிந்தும் அவற்றில் பங்குபெறுவதும் பயிற்சி வேலையில் ஈடுபடுவதும் குற்றமாகும்.

அத்தகைய ஜாதி, சமூகம், இனம், மதம், மொழி அல்லது வட்டார குழுவினருக்கு அச்சத்தை அல்லது பீதியை அல்லது பாதுகாப்பு இல்லை என்ற உணர்வை அத்தகைய நடவடிக்கைகள் எந்த காரணம் கொண்டு உண்டாகின்றன. அல்லது உண்டாக்கக் கூடும் என்று அறிந்தும் அதில் பங்கு பெறுவோர் குற்றம் புரிந்தவர் ஆவார். இந்த குற்றத்திற்கு தண்டனையாக 3 ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் சிறைக்காவலுடன் கூடிய அபராதங்கள் விதிக்கப்படும்.

2. மேலே விவரிக்கப்பட்டுள்ள குற்றத்தின் வழிபாடு நடைபெறும் இடத்தில் செய்வது குற்றம், மத வழிபாட்டுக்கு ஆன மக்கள் கூடியிருக்கும் அரங்கிலும் அந்த குற்றத்தினை புரிய கொடுத்தது. அப்படி புரிந்தால் அதற்காக ஐந்து ஆண்டுகள் வரை சிறைக் காவலும் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 153 – B

### பேச்சு, எழுத்து அல்லது சைகையால் தேசிய ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவித்தல்

## Imputations, assertions prejudicial to National Integration

1. பேச்சு, எழுத்து அல்லது சைகையால் அல்லது காணத்தகும் பொருட்களின் மூலம் அல்லது வேறு எந்த விதத்திலாவது.

a) ஒரு சமய, இன, மொழி அல்லது சாதி சமூகம் ஆகியவற்றில் உறுப்பினராக இருக்கின்ற காரணம் காட்டி எவரேனும், சட்டரீதியாக நிறுவப்பட்டுள்ள இந்திய அரசிடம் உண்மையான நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் இருக்க முடியாது அல்லது இந்திய அரசாட்சியில் உரிமையையும் சுதந்திரத்தையும் முழுமையாக நிலை நிறுத்தமுடியாது என்கிற வகையில் குற்றச்சாட்டைச் செய்தாலும் சுமத்தினாலும்.

b) சமய, இன,மொழி அல்லது பிராந்தியக்குழு, சாரி சமூகம் அல்லது பிரிவு எதனிலேனும் உறுப்பினராக இருக்கின்ற காரணம் காட்டி எவருக்கேனும் இந்தியாவின் குடிமக்கள் என்ற முறையில் அவர்களுக்குள்ள உரிமைகள் மறுக்கப்பட வேண்டும், பறிக்கப்பட வேண்டும் என்று உரைக்கின்ற அல்லது ஆலோசனை சொல்கின்ற பிரச்சாரம் செய்கின்ற அல்லது வெளியிடுகின்ற அல்லது

c) ஒரு சமய, இன, மொழி, பிராந்தியக் குழு அல்லது சாதி, சமூகம் எதனிலேனும் உறுப்பினராக இருக்கின்றனர் என்று காரணம் காட்டி எந்த ஓர் உறுப்பினருக்குரிய கடப்பாடு பற்றி உரைத்தல், ஆலோசனை, கோரிக்கை அல்லது வேண்டுகோள் எதையேனும் வெளியிடுதல் ஆகியவற்றால் அந்த வகுப்பினருக்கும், மற்றவர்களுக்கும் இடையே ஒற்றுமையின்மை, பகை உணர்ச்சி அல்லது குரோதம் அல்லது வெறுப்பை உண்டாக்கும் விதத்தில் அத்தகைய ஆலோசனை, அறிவிப்பு, கோரிக்கை, வேண்டுகோள் ஆகியவற்றைச் செய்கின்ற அல்லது வெளியிடுகின்ற ;

ஒவ்வொருவருக்கும் மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

2. வழிபாட்டிடம் அல்லது சமய வழிபாடு அல்லது சமயச் சடங்குகள் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் ஒரு கூட்டத்தில் (1) வது உட்பிரிவில் கூறப்பட்டுள்ள குற்றச் செயலைப் புரிவோருக்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறைக்காவல் தண்டனை விதிக்கப்படும். அத்துடன் அபராதமும் விதிக்கப்படலாம்.

## பிரிவு -154

## கலகம் நடந்த இடத்தின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பவருக்கு தண்டனை

## Owner or Occupier of land on which an Unlawful Assembly is Held

யாரும் தம்முடைய இடத்தில் சட்ட விரோதமான கூட்டத்தை அனுமதிக்கக் கூடாது கலகம் நடைபெறுவதையும் அனுமதிக்கக் கூடாது.

ஒருவருடைய நிலத்தில் அத்தகைய சட்ட விரோதமான கூட்டம் அல்லது கலகம் நடைபெற்றால் அதனைப் பற்றி உடனே அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும்.

அப்படி அவர் அறிவிக்காமல் இருப்பது குற்றம். அத்தகைய கூட்டத்தை அல்லது கலகத்தை அனுமதித்தாலும் குற்றம், அந்தக் குற்றத்திற்குத் தண்டனையாக அவருக்கும் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படும்.

இந்த குற்றத்தை நிலச் சொந்தக்காரர் நேரடியாகப் புரியாவிட்டாலும் அவருடைய ஆள் அல்லது பிரதிநிதி அல்லது மேலாளர் செய்தாலும் அபராதம் விதிக்கப்படும்.

அந்த குற்றம் நடைபெறாமல் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவர் உடனே எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும் குற்றமாகும்.

பிரிவு — 155

## ஒரு இடத்தின் சொந்தக்காரருக்கு ஆதரவாக கலகம் நடத்துவதற்கான தண்டனை

## Liability of person for whose Benefit Riot is Committed

சட்ட விரோதமான ஒரு கூட்டம் கலகம் செய்கின்றது. கலகம் நடைபெறும் இடத்தின் சொந்தக்காரருக்கு ஆதரவாக அந்த கலகம் நடைபெற்றாலும், அல்லது நிலச்சொந்தக்காரரின் உரிமைக்காகக் கலகம் நடைபெற்றாலும், அல்லது நிலச் சொந்தக்காரருக்குச் சாதகமாகக் கலகம் நடைபெற்றாலும் அல்லது கலகத்தின் மூலம் அவருக்கு ஏதாவது நன்மை அல்லது இலாபம் ஏற்படுவதாக இருந்தாலும், அந்த நிலத்தின் சொந்தக்காரர் அதனைத் தடுப்பதற்கு அல்லது அடக்குவதற்கு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி அந்த நிலத் (இடம்)-தின் சொந்தக்காரர் அல்லது அவருடைய பிரதிநிதி அல்லது மேலாளர் அந்தச் சட்டவிரோதமான கூட்டத்தை அடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் அவருக்கு அபராதம் விதிக்கப்படும்.

பிரிவு — 156

## கலகம் நடந்த இடத்தின் சொந்தக்காரருக்கு ஆதரவாக இருந்த agent அல்லது அந்த இடத்தின் வசிப்பவருக்கான தண்டனை

## Liability of agent of Owner or Occupier for whose benefit riot is committed

ஒரு நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அந்த நிலத்தை வைத்திருப்பவரின் நலம் கருதிக் கலகம் நடைபெற்றால், அவருடைய பிரதிநிதி அல்லது, மேலாளர் கலகம் நடைபெறவிருக்கிறது என்று தெரிந்த பின்னும் அதனை அடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் அந்த பிரதிநிதி அல்லது மேலாளரும் குற்றம் புரிந்தவர் ஆவார். அதற்காக அவருக்கும் அபராதம் விதிக்கப்படும்.

பொது அமைதியையும், ஒழுங்கையும் கருதி யாரும் எத்தகைய சட்டவிரோதக் கூட்டத்தையும் எந்த இடத்திலும் அனுமதிக்கக் கூடாது. அத்தகைய கூட்டத்தால் எத்தகைய பலனையும் அடைய முயற்சி செய்யக் கூடாது என்பதே இந்த பிரிவுகளின் நோக்கமாகும்,

பிரிவு - 157

## சட்டவிரோதமான கூட்டத்திற்கு என்று அமர்த்தப்பட்டு புகலிடம் கொடுப்பதற்கான தண்டனை

## Harbouring persons hired for an Unlawful Assembly

சட்ட விரோதமான ஒரு கூட்டத்துக்குப்புகலிடம் கொடுப்பது குற்றமாகும். ஆகவே சட்ட விரோதமான கூட்டத்தைச் சேர்ந்தவர்களை அல்லது சட்டவிரோதமான கூட்டத்திற்கு என்று அமர்த்தப்பட்டவர்களை அல்லது சட்டவிரோதமான கூட்டத்திற்கென்று கூலிக்கு அழைக்கப்படுகின்றவர்களை அவர்கள் மேலே கூறியபடி சட்ட விரோமான கூட்டத்தினர் என்று அறிந்த பின்னும் அவர்களை வரவேற்பதும், தம்முடைய இடத்தில் அவர்கள் ஒன்று சேர்வதற்கு அனுமதிப்பதும்,

அவர்களுக்குப் புகலிடம் தருவதும் குற்றமாகும். இந்தக் குற்றத்துக்கு ஆறு மாதங்கள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 158

### சட்ட விரோதமான அல்லது கலகக் கூட்டத்திற்கு என்று அமர்த்தப் பட்டவருக்கான தண்டனை

## Being hired to take part in an Unlawful Assembly or Riot or to Goarmed

இந்தச் சட்டத்தின 141-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களில் ஒன்றைப் புரிவதற்காக அல்லது துணை புரிவதற்காக யாராவது அமர்த்தப்பட்டாலும், கூலிக்கு அமர்த்தப்பட்டாலும்) அல்லது அமர்த்துவதற்கு முயற்சி நடைபெற்றாலும் குற்றமாகும். இந்த குற்றத்துக்கு ஆறு மாதங்கள் வரை சிறைக்காவல் விதிக்கலாம் அல்லது, அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

அப்படி அமர்த்தப்பட்ட நபர் மரணத்தை உண்டாக்கக் கூடிய ஆயுதம் அல்லது அபாயகரமான ஆயுதம் தாங்கி அந்தக் கூட்டத்தில் செல்ல முன்வந்தால் அந்த நபருக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 159

### அமைதிக்கு பங்கம் விளைவித்தல்

## Affray

பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் பொது இடத்தில் சண்டை பிடிப்பதும் வசை பாடுவதும் குற்றமாகும்.

பிரிவு — 160

### பங்கம் விளைவித்ததற்கான தண்டனை

## Punishment for Committing Affray

மேலே குறிப்பிட்டுள்ள குற்றத்தை யார் புரிந்தாலும் அந்த நபருக்கு ஒரு மாத காலத்திற்கு உட்பட்ட சிறைக்காவல் அல்லது 100 ரூபாய்க்கு மேற்படாத அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

# அத்தியாயம் - 9

# (CHAPTER – 9)

### பொது ஊழியர்கள் சம்பந்தப்பட்ட குற்றங்கள்

## Offencs by or Relating to Public Servants

பொதுஊழியர் என்று இந்த அத்தியாயத்தில் அரசாங்க ஊழியர்களை குறிப்பிட்டுள்ளனர். எனவே கீழ்வரும் பிரிவுகளில் வரும் இந்த பொது ஊழியர் அல்லது அரசு ஊழியர் என்ற சொல் அரசாங்க பணியில் உள்ளவர்களைக் குறிக்கும்.

பிரிவு — 161

## பொதுஊழியர்கள் ஒரு கடமையை நிறைவேற்ற ஊதியத்தைத் தவிர கையூட்டுப் பெறுதல்

## Public servant taking gratification other than Legal Remuneration in respect of an Official Act

பொதுஊழியருக்கு அரசு ஊதியம் கொடுக்கின்றது. ஒரு கடமையை ஆற்றுவதற்காக அல்லது சலுகையை காட்டுவதற்காக அல்லது உதவி செய்வதற்காக அல்லது உபத்திரவம் தருவதற்காக அவர்கள் பிறரிடமிருந்து எத்தகைய ஊதியமும் அல்லது இலாபமும் லஞ்சமாக பெறக் கூடாது. அப்படி பெறுவது குற்றமாகும்.

பொதுஊழியர் என்ற சொல் மத்திய அரசில் பணிபுரிவோர், மாநில அரசில் பணிபுரிவோர், உள்ளாட்சித் துறையில் அல்லது அரசாங்க நிறுவனங்களில் பணி புரிவோர் ஆகிய அனைவரையும் குறிக்கும் (21 IPC பிரிவை பார்க்கவும்). பொது ஊழியராக பணிபுரியும் நிலையை எதிர்நோக்கி உள்ளவர்கள் மேலே குறிப்பிட்டபடி ஊதியம் பெறுவதும் குற்றமாகும். இந்த குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

### *Explanation:*

பொதுஊழியராக பணிபுரியும் நிலையினை எதிர்நோக்கி உள்ளவர் என்று இங்கே குறிப்பிடப்படுவது வேலைக்கு செல்லும் வாய்ப்பினை உறுதியாக எதிர்நோக்கி உள்ளவர்களை மட்டும் குறிக்கும். அப்படி இல்லாமல் தான் ஒரு பொது ஊழியர் ஆகும் வாய்ப்பு இருக்கிறது என்று கூறி பிறரை ஏமாற்றி இத்தகைய ஊழியத்தை பெறுவோரை மோசடி செய்த குற்றத்திற்காக தான் தண்டிக்க முடியும். இந்த பிரிவு இவர்களுக்கும் பொருந்தாது. ‘ஊதியம்’’ என்ற சொல் பண ஊதியத்தை மட்டுமல்லாமல் பண மதிப்புள்ள பண்டங்களையும் குறிக்கும். சட்டபூர்வமாக வாங்கும் சம்பளத்தையும் அரசாங்கத்திடமிருந்து ஒரு பொது ஊழியர் சட்டபூர்வமாக பெற தகுந்த எல்லா வகையான வரவுகளும் அடங்கும்.

ஒரு காரியத்தை செய்வதற்கும் செய்யாமல் இருப்பதற்கும் பெறுகின்ற லாபத்தையும் இந்த பிரிவு உள்ளடக்கும்.

பிரிவு — 165

## விலை உயர்ந்த பொருட்களை பொதுஊழியர்கள் ஒரு கடமையை நிறைவேற்றியதற்காக கையூட்டாகப் பெறுதல்

## Public Servant Obtaining valuable things, without consideration from person concerned in proceeding or business transacted by such Public Servant

ஒரு பொதுஊழியர் மூலம் ஒருவருக்கு ஒரு காரியம் நடைபெற இருக்கிறது. இதனை அந்த பொது ஊழியார் அறிவார். இந்த நிலையில் அவர் அந்த நபரிடம் இருந்து விலை கொடுக்காமல் ஒரு விலை மதிப்புள்ள பொருளை பெறுவது குற்றமாகும். அந்த பண்டத்திற்கு உரிய விலையைவிட மிகவும் குறைந்த விலைக்கு அந்த பண்டத்தை பெறுவதும் குற்றம். அவர் அந்தப் பொருளை தனக்காக பெறுவதும் அல்லது தனக்கு வேண்டிய வேறு ஒருவருக்காக பெறுவதும் குற்றமாகும். தன்னுடைய மேலதிகாரியின் மூலம் ஒரு காரியம் அந்த நபருக்கு ஆகவேண்டிய நிலையில் அப்படிபெறுவது குற்றமாகும். மேற்கூறியவாறு அந்தபொருளை சம்பந்தப்பட்ட நபரிடம் இருந்து பெறாமல். அந்த நபருக்கு வேண்டியவர் அல்லது சொந்தகாரரிடம் இருந்து அப்படிப் பெறுவதும் குற்றமாகும். இந்த குற்றத்திற்கு

மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

***உதாரணம் :***

தாஸ் என்பவர் ஒரு நீதிபதி. அவருடைய நீதிமன்றத்தின் ராமன் என்பனுடைய வழக்கு நடைபெற்று வருகிறது. அங்கே அரசாங்க கடன் பத்திரம் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. தாஸ் என்ற நீதிபதி இந்த பிரிவின் கீழ் குற்றவாளியாய் ஆகின்றார்.

பிரிவு – 165 – A

## கையூட்டு பெறுவதற்கு குற்ற உடந்தையாக இருப்பதற்கான தண்டனை
## Punishment for abetment of offences defined in Section 161 or Section 165

161 அல்லது 165–ஆவது பிரிவுகளில் கூறப்பட்டுள்ள குற்றத்தை பிறர் புரிவதற்கு உடந்தையாக அல்லது தூண்டுதலாக யார் இருந்தாலும் அவர் குற்றம் புரிகின்றவராகிறார். உடந்தையாக இருந்ததன் விளைவாக அந்தக் குற்றம் நடைபெறாமல் இருந்தாலும் பாதகம் இல்லை. அப்போதும் உடந்தையாக இருந்தவரை குற்றவாளி என்று கருதி அவருக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 170

## பொது ஊழியராக நடித்தல்
## Personating a Public Servant

ஒருவருக்கு எத்தகைய அரசாங்க பொறுப்பும் இல்லாத போது, தான் ஒரு பொது ஊழியராக பணிபுரிவதாக நடிப்பதும் குற்றமாகும். அப்படி பொறுப்பில் இல்லாத போது பொறுப்பில் உள்ள ஒரு பொது ஊழியரைப் போல் ஆள் மாறாட்டம் செய்வதும் குற்றமாகும். இப்படி பொறுப்பில் இருப்பது போல நடித்து எத்தகைய காரியத்தை செய்தாலும் அல்லது செய்ய முயற்சித்தாலும் குற்றமாகும். இந்த குற்றத்திற்காக இரண்டு ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 171

## பொது ஊழியருடைய சீருடை அல்லது அடையாள அட்டை ஆகியவற்றை பொது ஊழியர் அல்லாதவர் ஏமாற்றும் எண்ணத்துடன் அணிதல்
## Wearing garb or carrying token used by Public Servant with Fraudulent Intent

சில தரப்பட்ட பொது ஊழியர்கள் சீருடை அல்லது அடையாள சின்னங்கள் அணிய வேண்டும். ஆனால் அத்தகைய பொது ஊழியராக இல்லாதவர் யாரும் அந்த சீருடைகளை அணிவதும் அல்லது அடையாள சின்னங்களை வைத்திருப்பதும் குற்றமாகும். தான் பொது ஊழியர் என்று பிறரை நம்ப வைப்பதற்காக அத்தகைய சீருடைகளை அணிவதும் அடையாள சின்னங்களை வைத்திருப்பதும் குற்றமாகும். இந்த குற்றத்திற்காக மூன்று மாதங்கள் வரை சிறைக்காவல் அல்லது 200 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

# அத்தியாயம் - 10
# (CHAPTER – 10)

## பொது ஊழியர்களின் சட்டப்பூர்வமான ஆணையை மறுத்த குற்றங்கள்

## Contempt of the Lawful Authority of Public Servants

பிரிவு – 182

### ஒருவரை துன்பப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு பொது ஊழியரிடம் பொய்யான தகவலை கொடுத்து செயல்பட செய்தல்

### False information with intent to cause Public Servant to use his Lawful Power to the injury of another persons

ஒரு பொது ஊழியரிடம் நெஞ்சறிந்தே பொய்யை கூறுகிறோம். அதன் விளைவாக அந்த அதிகாரி தன்னுடைய கடமையை சரிவர செய்ய முடியாமல் தவறுதலாக நடக்க வேண்டி நேரிடும். தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி பிறருக்கு தொல்லை தர நேரிடலாம். ஆகவே அத்தகைய பொய் தகவல் கொடுத்தவருக்கு ஆறு மாதங்கள் வரை சிறைக்காவல் அல்லது ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்ட அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 186

### பொது ஊழியரை தம்முடைய செயலைச் செய்யவிடாமல் தடுத்தல்

### Obstructing Public Servant in Discharge of Public Functions

ஒரு பொது ஊழியரை தன்னுடைய கடமையை செய்ய முடியாமல் தடுத்தால் மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறைக்காவல் அல்லது 500 ரூபாய்க்கு உட்பட்ட அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும் (353, 332, 333 IPC).

# அத்தியாயம் - 11

# (CHAPTER – 11)

## பொய்சாட்சியம் கூறுதல், பொது நீதிக்கு முரணான குற்றங்கள்

## False Evidence and Offences Against Public Justice

பிரிவு – 201

### குற்றவாளியை மறைக்க சாட்சியத்தை மறைத்தல் அல்லது பொய் தகவல் கொடுத்தல்

### Causing disappearance of evidence of Offence or giving false Information to Screen Offender

ஒரு குற்றம் நடைபெற்றதை அறிகிறோம் அல்லது அதனைப்பற்றி அறியும் வாய்ப்பு நமக்கு இருக்கிறது. அந்த நிலையில் அந்தக் குற்றம் பற்றிய சாட்சியத்தை குற்றவாளியைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் மறைப்பது குற்றமாகும். அந்த நோக்கத்துடன் நடைபெற்ற குற்றத்தை பற்றிய பொய்யான தகவலைத் தருவதும் தண்டனைக்கு உரிய குற்றமாகும்.

அப்படி மரண தண்டனை விதிக்கத்தக்க குற்றம் நடைபெற்றிருந்தால், அப்படிச் செய்தவருக்கு ஏழு ஆண்டுகள் வரை சிறைக்காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரை சிறைக்காவல் விதிக்கத்தக்க குற்றம் நடைபெற்றிருந்தால், மூன்று ஆண்டுகள் வரை சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பத்து ஆண்டுகளுக்கும் குறைவான தண்டனை பெறத்தக்க குற்றம் நடை பெற்றிருந்தால், அந்தக் குற்றத்திற்கு விதிக்கத்தக்க தண்டனையில் நானகில் ஒரு பங்கைச் சிறைக்காவலாகவும் அல்லது அபராதமாகவும் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 211

## துன்பம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பொய்யான குற்றச்சாட்டை கொடுத்தல்

## False Charge of Offence made with Intent to Injure

ஒருவருக்குத் துன்பம் உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் அவர் மீது குற்றம் சாட்டி நடவடிக்கை எடுப்பதும், பிறரைத் தூண்டி அப்படி நடவடிக்கை எடுக்கச் செய்வதும் குற்றமாகும்.

சட்ட பூர்வமாகவும் நியாய பூர்வமாகவும், எந்தவித ஆதாரமும் இல்லாமல் ஒருவர் மீது குற்றம் புரிந்ததாகப் பொய்யான குற்றச்சாட்டைத் தொடர்வதும் குற்றமாகும். இதற்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைக் காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

அப்படி சுமத்தப்பட்ட குற்றம் மரண தண்டனை, ஆயுள் தண்டனை அல்லது ஏழு ஆண்டுகளும் அதற்கு மேலும் சிறைக்காவலைத் தண்டனையாகப் பெறத்தக்க குற்றச்சாட்டாக இருப்பின், பொய்க் குற்றம் சாட்டியவருக்கு ஏழு ஆண்டுகள் வரை சிறைக்காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 221

## பொதுஊழியர் வேண்டுமென்றே கைதுசெய்ய வேண்டியவரை கைதுசெய்யாமல் விடுதல்

## Intentional Omission to Apprehend on the part of Public Servant bound to Apprehend

குற்றம் சாட்டப்பட்டவர்களை அல்லது சட்டப்படி குற்றம் சாட்டப்பட வேண்டியர்களைச் சிறைப்பிடிப்பதற்கும், காவலில் வைப்பதற்கும், ஒரு பொது ஊழியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த பொது ஊழியர் அந்தக் குற்றவாளிகளைக் கருத்துடன் சிறைபிடிக்காமல் விட்டு விடுவதும் தப்பி ஓடிவிடும்படி செய்வதும் அல்லது தப்பி ஓடுவதற்கு முயற்சி செய்யத் துணையாக இருப்பதும் குற்றமாகும்.

சம்பந்தப்பட்ட குற்றவாளி, மரண தண்டனை பெறக்கூடிய குற்றத்தைப் புரிந்திருந்தால் அந்த பொது ஊழியருக்கு ஏழு ஆண்டுகள் வரை சிறைக்காவல் தண்டனையாக விதிக்கப்படும். அத்துடன் அபராதமும் விதிக்கப்படலாம்.

அந்த குற்றவாளி ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரை தண்டனை பெறக்கூடிய குற்றத்தைப் புரிந்திருந்தால் அந்தப் பொதுஊழியருக்கு அபராதத்துடன் அல்லது அபராதமின்றி மூன்று ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் தண்டனையாக விதிக்கப்படும்.

அந்த குற்றவாளி பத்து ஆண்டுகளுக்கும் குறைவான தண்டனை பெறத்தக்க குற்றத்தைப் புரிந்திருந்தால், அந்தப் பொதுஊழியருக்கு அபராதம் இல்லாமல் இரண்டு ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் தண்டனையாக விதிக்கப்படலாம்..

பிரிவு — 222

## பொதுஊழியர் வேண்டுமென்றே தண்டனை விதிக்கப்பட்டவரை கைது செய்யாது விடுதல்

## Intentional Omission to Apprehend on the part of Public Servant bound to Apprehend Person Under Sentence or Lawfully Committed

ஒரு நீதிமன்றத்தின் உத்தரவுப்படி ஒரு நபருக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது அல்லது ஒரு நபர் மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். அத்தகைய நபரைச் சிறைப் பிடிப்பதற்கும் காவலில் வைப்பதற்கும் அதிகாரம் பெற்றுள்ள ஒரு பொது ஊழியர் கருத்துடன் அந்த நபரைச் சிறைப்பிடிக்காமல் இருக்கிறார். அல்லது காவலில் உள்ள அந்த நபரைத் தப்பி ஓடுவதற்கு அல்லது தப்பி ஓட முயற்சி செய்வதற்குத் துணையாக இருக்கிறார். அந்தப் பொது ஊழியர் தண்டனைக்குரிய குற்றவாளி ஆகிறார்.

சம்பந்தப்பட்ட நபர் மரண தண்டனைக்கு உரியவராக இருப்பின், அந்தப் பொது ஊழியருக்கு ஆயுள் தண்டனை அல்லது பதினான்கு ஆண்டுகள் வரை சிறைக்காவல் தண்டனையாக விதிக்கப்படும். அத்துடன் அபராதமும் விதிக்கப்படலாம்.

அந்த நபர் ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட தண்டனைக்கு உரியவராக இருப்பின் அந்த பொது ஊழியருக்கு அபராதத்துடன் அல்லது அபராதம் இன்றி ஏழு ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் தண்டனையாக விதிக்கப்படும்.

அந்த நபர் பத்து ஆண்டுகளுக்கும் குறைவான தண்டனை பெறக்கூடியவராக இருந்தாலும், மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் காவலில் வைக்கப்பட்டிருந்தாலும், அந்தப் பொது ஊழியர் அபராதத்துடனும் அல்லது அபராதம் இல்லாமலும் மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவலைத் தண்டனையாகப் பெறுவார்.

பிரிவு — 223

## கவனக்குறைவின் காரணமாக பொதுஊழியர் குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது தண்டனை பெற்றவரை காவலில் இருந்து தப்பி ஓடச்செய்தல்

## Escape from Confinement or Custody Negligently suffered by Public Servant

குற்றம் சாட்டப்பட்டுள்ள அல்லது தண்டிக்கப்பட்டுள்ள அல்லது விசாரணைக் காலத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ள ஒரு நபரைக் காவலில் காக்கும் பொறுப்புள்ள ஒரு பொதுஊழியர் தம் அஜாக்கிரதையின் காரணமாக அந்தக் குற்றவாளி காவலிலிருந்து தப்பி ஓடிவிடும்படி விட்டு விட்டால் அந்தப் பொதுஊழியருக்கு இரண்டு ஆண்டுகள் வரை வெறுங்காவல் அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

# அத்தியாயம் - 12
# (CHAPTER – 12)

## அரசின் நாணயங்கள், ரூபாய் நோட்டுகள் முத்திரைக் காகிதங்கள் சம்பந்தப்பட்ட குற்றங்கள்

## Offences Relating to Coin and Government Stamps

பிரிவு — 230

### நாணயம் வரையரை

அரசாங்கம் அல்லது அரசாங்கத்தின் அதிகாரம் பெற்று முத்திரையிட்டு வழங்கப்பட்டு பணமாக பயன்படுத்தப்படும் உலோகம் நாணயம் என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது.

## இந்திய நாணயம்
## Indian Coin

இந்திய நாணயம் என்பது இந்திய அரசாங்கத்தால் முத்திரையிடப்பட்டு பணமாக உபயோகப்படுத்துவதற்காக வழங்கப்படும் உலோகமாகும். அத்தகைய உலோகத்தை பணமாக உபயோகப்படுத்துவதை கைவிட்ட பிறகும் கூட இந்த அத்தியாயத்தின் படி அதனை இந்திய நாணயம் என்று குறிப்பிடப்படுகிறது.

1. பண்டமாற்று நாணயமாக வழங்கப்பட்ட சோழிகள் நாணயம் ஆகாது.
2. பணமாக உபயோகப்படுத்தப்பட்டாலும் அரசாங்க முத்திரை இடப்படாத பித்தளைக் கட்டிகளை நாணயமாகக் கொள்ள முடியாது.
3. விருதுச் சின்னங்களை (மெடல்கள்) நாணயமாக கொள்ள முடியாது, ஏனெனில், அவற்றைப் பணமாகப் பயன்படுத்துவதற்காக அளிப்பதில்லை.
4. (கிழக்கிந்திய) கம்பெனியின் ரூபாய் என்று குறிப்பிடப்படுவதும் இந்திய நாணயமாகும்.
5. முன்பு இந்திய அரசாங்கத்தின் அதிகாரத்தின் பேரில் பணமாக உபயோகப்படுத்தப்பட்டு வந்த பருக்காபாத் ரூபாய் இப்பொழுது புழக்கத்தில் இல்லை. இருப்பினும் அதையும் இந்திய நாணயம் என்றே கொள்ள வேண்டும்.

பிரிவு — 231

## போலி நாணயத்தை உண்டாக்குதல்
## Counterfeiting Coins

போலிநாணயங்களை உருவாக்குவது குற்றம். அப்படி உருவாக்குவதற்கான வேலையின் எத்தகைய கட்டத்தையும், தெரிந்துசெய்வதும் குற்றம். இந்தக் குற்றம் புரிந்தவருக்கு ஏழு ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

***விளக்கம்:***

ஏமாற்றவேண்டும் என்ற கருத்துடன் அல்லது ஏமாற்றுவதற்கு பயன்படுத்த வேண்டும் என்று தெளிவுடன் ஓர் உண்மையான நாணயத்தைக்கூட வேறொரு (மதிப்புள்ள) நாணயத்தைப்போல் தோன்றும்படி செய்வது இந்தக் குற்றத்தைச்சாரும்.

பிரிவு — 232

## இந்திய நாணயங்களை போலியாக செய்தல்
## Counterfeiting India Coin

போலி இந்திய நாணயங்களை உருவாக்குவதும் குற்றம். அப்படி உருவாக்குவதற்கான வேலையின் எந்தக் கட்டடத்தில் ஈடுபட்டிருந்தாலும் அது குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 233

## போலி நாணயம் செய்வதற்கான கருவிகளை செய்தல் அல்லது விற்பனை செய்தல்

## Making or Selling Instrument for Counterfeiting Coin

போலி நாணயங்களை உருவாக்குவதற்கான இயந்திரங்கள், வார்ப்புகள் கருவிகள், அவற்றின் பாகங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதும், பழுது பார்ப்பதும், விற்பது, வாங்குவது ஆகியவையும் குற்றமாகும். இந்த குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 234

## போலி இந்திய நாணயங்களைச் செய்வதற்கான கருவிகளைச் செய்தல் அல்லது விற்பனை செய்தல்

## Making or Selling Instrument for Counterfeiting Indian Coin

போலியாக இந்திய நாணயங்களை உருவாக்குவற்கென இயந்திரங்கள், வார்ப்புகள் கருவிகள் அவற்றின் பாகங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பது பழுதுபார்ப்பது, விற்பது, வாங்குவது ஆகியவையும் குற்றமாகும், இந்தக் குற்றத்திற்கு ஏழு ஆண்டுகள் வரை சிறைக்காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 235

## போலியாக நாணயங்கள் அல்லது இந்திய நாணங்கள் தயாரிப்பதற்கான கருவிகள் அல்லது பொருட்கள் வைத்திருத்தல்

## Possession of Instrument or Material for the purpose of using the same for Counterfeiting Coin

போலி நாணயங்களைத் தயாரிப்பதற்காக கருவிகளை அல்லது பொருட்களை வைத்திருந்தால் மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும். அத்தகைய பொருட்களின் மூலம் உருவாக்க கூடியது இந்திய நாணயத்தின் போலி என்றால் பத்து ஆண்டுகள் வரை சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

# அத்தியாயம் - 14

# (CHAPTER – 14)

## பொதுசுகாதாரம், பாதுகாப்பு, வசதி, ஒழுக்கம், பண்புகள் ஆகியவற்றைப் பாதிக்கும் குற்றங்கள்

## Offences Affecting the Public Health, Safety, Convenience Decency and Morals

பிரிவு — 279

## பொதுயிடத்தில் அஜாக்கிரதையாக வண்டியோட்டுதல் அல்லது சவாரி செய்தல்

## Rash Driving or Riding on a Public Way

மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் வகையில் அல்லது காயம் அல்லது தீங்கு ஏற்படும் விதத்தில், ஒரு வாகனத்தை அஜாக்கிரதையாக ஓட்டுவதும் சவாரி செய்வதும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு ஆறு மாதங்கள் வரை சிறைக்காவல் அல்லது ஆயிரம் ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 293

### ஆபாசமான பொருட்களை இளைஞர்களுக்கு விற்றல்

## Sale, etc. of Obscene Objects to Young Persons

இதற்கு முன் சொல்லப்பட்ட பிரிவின்படி குற்றம் என்று கொள்ளத்தக்க ஆபாச பொருளை இருபது வயதுக்கு குறைந்தவர்களுக்கு விற்பதும், வாடகைக்கு கொடுப்பதும், வழங்குவதும், காட்டுவதும், அவர்கள் மத்தியில் புழங்கவிடுவதும் அல்லது அவர்களிடையே இத்தகைய செயல்களை புரிவதற்கு முயற்சி செய்வதும் குற்றமாகும். இந்த குற்றத்திற்கு ஆறு மாதங்கள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

ஆபாசமான புத்தகம், விளக்கம், படம், ஓவியம் பொருள் என்பனவற்றை குறிக்கும்.

மதசம்பந்தமான புத்தகம், வெளியீடு எழுத்து, படம், ஓவியம் ஆகியவற்றிற்கும் கோவிலில் அல்லது கோவில் ரதங்களில் பொறிக்கப்பட்டுள்ள செதுக்கப்பட்டுள்ள அல்லது உருவாக்கி உள்ளவற்றிற்கும் இதில் அடங்காது.

பிரிவு – 294

### ஆபாசமான செயல் அல்லது பாடல்களைப் பாடுதல்

## Obscene Acts and Songs

***பிறருக்கு தொல்லை தரும் வகையில்:***

பொது இடத்தில் எந்த ஆபாசச் செயலைப் புரிந்தாலும், அல்லது

ஆபாசமான ஒரு பாடலைப் பாடினாலும் வாசகத்தை உச்சரித்தாலும், சொன்னாலும்**;**

இந்த குற்றத்துக்கு மூன்ற மாதங்கள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

# அத்தியாயம் - 16
# (CHAPTER – 16)

### மனிதஉடலுக்கும், உயிருக்கும் ஊறுசெய்யும் குற்றங்கள்

## Offences Affecting Human Body

பிரிவு – 299

### மரணம் விளைவிக்கும் குற்றம்

# Culpable Homicide

மரணத்தை உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் ஒரு செயலைப் புரிதல் அல்லது மரணம் விளைவிக்கக் கூடிய உடல் காயத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற கருத்துடன் ஒரு காரியத்தைச் செய்தல் அல்லது தன்னுடைய செய்கையால் மரணம் சம்பவிக்கும் என்று தெரிந்தும் அந்த செயலை புரிதல் ஆகியவற்றால் மரணம் ஏற்பட்டால், அதனை மரணம் விளைவிக்கும் குற்றம் என்று கூறப்படுகிறது.

***உதாரணம் :***

1. மொய்தீன், ஒரு பள்ளத்தைக் குச்சிகளையும், சருகுகளையும் போட்டு மரணம் உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் மூடி மறைக்கிறான். தன்னுடைய செயலால் மரணம் உண்டாகும் என்பதை மனதார அவன் அறிந்தும் இந்த காரியத்தைப் புரிகின்றான். பள்ளம் இருக்கிறது என்பதை அறியாத கோவிந்தன் நடந்து வரும்போது அந்தப் பள்ளத்தில் விழுந்து மரணம் அடைகிறான். இந்த மரணத்துக்கு மொய்தீன் பொறுப்பேற்க வேண்டும். ஆகவே மரணம் விளைவிக்கும் குற்றத்தை மொய்தீன் புரிந்தவனாகிறான்.

2. ஒரு புதருக்குப் பின்னால் மூர்த்தி மறைந்திருக்கிறான் என்பது ராஜுவுக்குத் தெரியும். ஆனால் ராமனுக்கு அதைப்பற்றித் தெரியாது. மூர்த்திக்கு மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது இப்படிச் செய்தால் மூர்த்திக்கு மரணம் சம்பவிக்கும் என்று தெரிந்திருந்தும் ராஜு அந்தப் புதரை நோக்கிச் சுடும்படி ராமனைத் தூண்டுகிறான். ராமன் அப்படியே சுடுகிறான், குண்டு பட்டு மூர்த்தி மரணம் அடைகிறான். ராமன் குற்றமற்றவனாக இருக்கலாம். ஆனால் ராஜுவின் மீது மரணத்தை விளைவிக்கும் குற்றம் சாரும்.

***விளக்கம்-1:***

நோய்வாய்ப்பட்டு அல்லது இயலாமையால் அவதியுற்றுத் துன்பப்படுபவனுடைய உடலுக்குக் காயம் உண்டாக்குவதன் மூலம், அவனுடைய சாவைத் துரிதப்படுத்துகின்றனர். அந்த நிலையில் அந்த நபர் அவனுக்கு மரணத்தை உண்டாக்கியதாகவே கருதப்படுவார்.

***விளக்கம் - 2:***

உடல் காயத்தால் மரணம் உண்டாக்கினால் காயத்தை உண்டாக்கியவனே அந்த மரணத்தை விளைவித்ததாகக் கொள்ளப்படுவான். காயம்பட்டவுடன் மருத்துவ உதவியை நாடிச் சென்றிருந்தால் மரணம் விளைந்திருக்காது என்றாலும், மரணத்தின் பொறுப்பு அவனையே சாரும்.

***விளக்கம் - 3:***

தாயின் கர்ப்பத்தில் இருக்கும் சிசுவுக்கு மரணத்தை உண்டாக்குவது இந்தக் குற்றத்தில் வராது. ஆனால் குழந்தையின் உறுப்புகளில் ஏதாவது தாயின் கர்ப்பப்பையிலிருந்து வெளியே வந்த பிறகு அத்தகைய மரணம் உண்டாக்கப்பட்டிருந்தால் அந்தச் செயல் குற்றமாகும். பிறந்த குழந்தை பிறப்பதற்கு முன்னே இறந்திருக்கலாம். அல்லது முழுமையாகப் பிறப்பதற்கேற்ப வாய்ப்பில்லாமல் இருக்கலாம். இருப்பினும் கர்ப்பப்பையை விட்டு நீங்கியவுடன் மரணத்தை உண்டாக்கும் செயல் என்று இடம் பெறக்கூடாது.

பிரிவு — 300

# கொலைக் குற்றம்
# Murder

மரணத்தை விளைவிக்கும் குற்றத்துக்கும், கொலைக்குற்றத்துக்கும் உள்ள வேறுபாடுகளை இந்த பிரிவில் காண்போம்.

மரணத்தை விளைவிக்கும் குற்றத்தை எப்பொழுது கொலைக் குற்றமாக கொள்ளலாம், எப்பொழுது கொள்ளக் கூடாது என்பதற்கு கீழே சில விதிவிலக்குகள் தரப்பட்டுள்ளன. அந்த விதி விலக்குகளுக்கு உட்பட்டு மற்ற சமயங்களில் மரணத்தை விளைவிக்கும் குற்றத்தை கொலைக் குற்றமாக கொள்ள வேண்டும். அப்படி கொலைக்குற்றமாகவே கொள்ளத்தக்க நிலைகள் என்னவென்றால் .

1. மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் ஒரு செயலை புரிந்து அதன் விளைவாக மரணம் ஏற்பட்டிருந்தால், அல்லது
2. உடலில் ஏற்படுத்தப்பட்ட காயத்தால் ஒருவர் மரணமடையலாம் காயத்தை உண்டாக்கியவருக்கு தான் ஏற்படுத்தும் காயத்தால் அந்த நபருக்கு மரணம் உண்டாகும் என்று தெரியும். தெரிந்தும் அந்த காயத்தை கருத்துடன் உண்டாக்குதல், அல்லது
3. ஒருவருடைய உடலை காயப்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் ஒரு காரியம் செய்யப்படுகிறது. அதனால் மரணம் விளைவிக்கின்றது அப்படி உண்டாக்க வேண்டும் என்று எண்ணிய காயம் இயற்கையின் சாதாரண போக்கில் மரணமடைய செய்வதற்கு போதுமானது என்று அறிந்திருத்தல், அல்லது
4. தான் செய்யும் காரியம் அபாயகரமானது அதனால் மரணம் சம்பவிக்கும் அல்லது பெரும்பாலும் மரணத்தை விளைவிக்க கூடிய உடல் காயம் ஏற்படும் என்று அறிந்திருந்தும் அத்தகைய காரியத்தைப் புரிதல் அத்துடன் அந்த காரியம் செய்வதற்கு எந்தவிதமான அவசியமும் இல்லாதிருத்தல்.

***உதாரணம்:***

a) பழனி என்பவனைக் கொல்ல வேண்டும் என்ற கருத்துடன் ராமு துப்பாக்கியால் சுடுகிறான். பழனி மரணம் அடைகிறான். ராமு கொலைக்குற்றம் புரிந்தவனாகிறான்.

b) சண்முகத்துக்கு நோய்வாய்ப்பட்டு உடல் பலவீனமாகவுள்ள நிலையில் பலமான அடி அவனைக் சாகடித்து விடும் என்று அறிந்துள்ள முருகேசன் அவனுக்கு உடம்பில் காயம் உண்டாக்கவேண்டும் என்ற கருத்துடன் ஓங்கியடிக்கிறான், அதன் விளைவாகச் சண்முகம் மரணம் அடைகிறான். உடல் நலமாக உள்ள மனிதனுக்கு அந்த அடி மரணத்தை உண்டாக்காது. இருப்பினும் முருகேசன் கொலைக் குற்றம் புரிந்தவனாகிறான். முருகேசனுக்குச் சண்முகத்தின் உடல் நிலையைப்பற்றி ஒன்றும் தெரியாத நிலையில் காயம் உண்டாக்கவேண்டும் என்ற கருத்துடன் அவன் சண்முகத்தை அடித்திருந்தால் அவன் மீது கொலைக் குற்றம் சாராது. ஏனெனில் அந்த அடி மரணத்தை உண்டாக்கக்கூடிய அடி அல்ல.

c) முனியன் முத்துவைக் காயப்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் கத்தியால் வெட்டுகிறான் அல்லது தடியால் அடிக்கிறான், அவன் உண்டாக்க நினைத்த காயம் சாதாரணமாக யாருக்கும் மரணத்தை உண்டாகக் கூடியது. காயம்பட்ட முத்து மரணம் அடைகிறான். முனியன் முத்துவைக் கொல்ல வேண்டும் என்ற கருத்துடன் காரியம் செய்யவில்லை. இருப்பினும் முனியன்மீது கொலைக் குற்றம் சாரும்.

d) ராமசாமி ஒரு காரணமும் இல்லாமல் ஒரு கூட்டத்தை நோக்கிச் சுடுகிறான். அதனால் கூட்டத்திலிருந்தவன் மரணம் அடைகிறான். யாரையும் கொல்ல வேண்டும் என்ற முன்யோசனையுடன் ராமசாமி கூட்டத்தைநோக்கிச் சுடவில்லை இருப்பினும் ராமசாமி மீது கொலை குற்றம் சாரும்.

## மரணம் விளைவிக்கும் குற்றம் எப்பொழுது கொலைக்குற்றம் ஆகாது
## When Culpable Homicide is Not Murder

### *விதிவிலக்கு: 1*

திடீரென்று தூண்டப்பட்டுவிட்ட உணர்ச்சிகளை அடக்கமுடியாமல் நிதானத்தை இழந்துவிட்ட சூழ்நிலையில், தன்னைக் கோபப்படுத்தியவரைத் தாக்கி மரணம் அடைய செய்தாலும் அல்லது அந்தக் கோபத்தில் தவறுதலாக வேறொரு நபரின் மரணத்தை உண்டாக்கியிருந்தாலும் மரணத்தை விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றம் ஆகாது.

மேலே கூறப்பட்ட விதிவிலக்கு இங்கே சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

1. அந்தக் கோப உணர்ச்சியை நாமே தேடிப் பெற்றதாக இருக்கக் கூடாது அதாவது நாம் வலிந்து ஒருவரைக் கொல்லவேண்டும் அல்லது தாக்கவேண்டும் என்று வம்புக்குப் போனதால் விளைந்த சண்டையில் கோபம் ஏற்பட்டு நிதானம் இழந்ததாக இருக்கக் கூடாது.

2. ஒரு பொது ஊழியர் சட்டப்படி தம் கடமையை ஆற்றும்பொழுது அத்தகைய உணர்ச்சி எழுவதற்கு இடம் இல்லை. சட்டப்படி ஒரு செயல் நடைபெறுவதைக் கண்டு பொங்கியெழ முடியாது.

3. ஒருவன் தன்னுடைய தற்காப்பு உரிமையைச் சட்டப்படி பயன்படுத்துவதால், தன்னுடைய உணர்ச்சிகள் கிளர்ந்து எழுந்தன என்ற வாதமும் ஒத்துக் கொள்ளப்படமாட்டாது.

***விளக்கம்:***

கொலைபுரியத்தூண்டும் அளவுக்கு, கோபம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாக்கியிருந்ததா இல்லையா என்பதை, அந்தச் சூழ்நிலையை ஒட்டித் தான் முடிவு எடுக்க வேண்டும்.

***<u>உதாரணம்:</u>***

1. முருகனால் கோபம் ஊட்டப்பட்ட முனியன் அந்தக் கோபத்தை அடக்க முடியாததன் விளைவால் முருகனுடைய குழந்தையைக் கொன்று விடுகிறான். இங்கு முனியன் மீது கொலைக்குற்றம் சாரும். ஏனெனில் கோபத்தைத் தூண்டியவன் முருகனே அவனுடைய குழந்தை அல்ல, அத்துடன் முருகனுடைய குழந்தை, அந்தக் கோபத்தின் விளைவாகத் தவறுதலாகக் கொல்லப்பட்டுவிட்டது என்று சொல்ல முடியாது.

2. ஒரு நீதிபதியின் முன் கொண்டுவரப்பட்ட ஒருவரைப் பார்த்து அந்த நீதிபதி “உன்னுடைய பேச்சை என்னால் நம்பமுடியாது, நீ பொய்சாட்சி கூறுகின்றாய், சத்தியத்திற்கு முரணாகப் பேசுகின்றாய்” என்று கூறுகிறார். அதனால் ஆத்திரமடைந்த அந்த நபர் கோபத்தில் நீதிபதியைக் கொன்று விடுகிறான். அந்த நபர் கொலைக்குற்றம் புரிந்தவனாகிறான்.

### *விதிவிலக்கு - 2:*

தன்னை அல்லது தன்னுடைய உடமையைக் காத்துக்கொள்ளும் பொருட்டுப் போராடும் நபர், சில சமயங்களில் சட்ட வரம்பை மீறிச் செயல்பட நேரிடலாம். அப்போது தன்னைத் தாக்குவோரைக் கொல்ல வேண்டும் என்ற கருத்தும் முன்யோசனையும் இன்றி பிறரை கொல்ல நேரிடலாம். அதனால் ஏற்பட்ட மரணத்திற்காக அந்த நபருக்கு மரணம் விளைவிக்கும் குற்றம்தான் சாரும், கொலைக்குற்றம் சாராது.

***உதாரணம் :***

ஒருவரை சாட்டையால் அடித்து துன்புறுத்துகின்றனர். சாட்டை அடியால் கொடுங்காயம் ஏற்படுத்த முடியவில்லை. இருப்பினும் அடிப்பட்டவர், தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காகக கைத்துப்பாக்கியால் சுடுகின்றார். அடித்தவர் மரணம் அடைகின்றார். சாட்டையடிக்குப் பிரதியாகத் துப்பாக்கியால் சுடுவது வரம்பு மீறிய செயலானாலும் சுட்டவர் அதைத் தவிர, தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேறு வழியே இல்லை என்று எண்ணி அப்படி சுட்டுயிருக்கிறார். எனவே சுட்டவர் மீது கொலைக்குற்றம் சாராது. மரணத்தை விளைவிக்கும் குற்றம் மட்டும்தான் சாரும்.

## *விதிவிலக்கு - 3:*

ஒரு பொதுஊழியர் அல்லது கடமையாற்றும், பொதுஊழியருக்கு உதவி செய்யும் ஒருவர் பொது நீதியை நிலை நாட்டும் வகையில் செயல்படும் போது, தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பினை மீறிச் செயல்பட்டு அதனால் மரணம் சம்பவித்தால், அது கொலைக்குற்றம் ஆகாது. ஏனெனில் பொது நீதியை நிலைநிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படுகிறாரேயன்றி யாரையாவது கொல்லவேண்டும் என்ற கெட்ட எண்ணம் அவருக்கு இல்லை. எனவே அவர் மீது மரணத்தை விளைவிக்கும் குற்றந்தான் சாரும்.

## *விதிவிலக்கு – 4 :*

முன்கூட்டியே திட்டமிடப்படாமல் திடீரென்று ஏற்படும் ஒரு சண்டையில் உணர்ச்சிகள் கொந்தளிப்பதால் மரணம் ஏற்படுகின்றது. அந்த சண்டையில் எதிரியின் பலவீனத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு அநியாயமாகப் போராடவில்லை. கொடூரமாகவோ அல்லது அசாதாரணமாகவோ யாரும் காரியம்செய்யவில்லை. இந்த நிலையில் ஏற்பட்ட மரணம் கொலையாகாது. மரணத்தை விளைவித்த குற்றந்தான் சாரும்.

***விளக்கம் :***

சண்டையை யார் தூண்டினார்கள் அல்லது யார் முதலில் வன்செயலுக்கு ஆயத்தமானார்கள் என்ற பிரச்சனை இங்கே முக்கியமல்ல.

## விதிவிலக்கு – 5 :

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒருவர் தன்னிச்சையாக மரண அபாயத்தை வலிந்து ஏற்க முன்வந்தால் அல்லது மரணம் அடைந்தால் அதனை கொலைக்குற்றமாகக் கூற முடியாது. மரணம் விளைவித்த குற்றமாகத்தான் கொள்ளமுடியும்.

***உதாரணம் :***

தாஸ் என்பவரால் தூண்டப்பட்டு, குமார் என்ற பையன் தற்கொலை செய்து கொள்கிறான். குமாருக்கு பதினெட்டு வயது பூர்த்தியாகவில்லை. ஆகவே தன்னிச்சையாக ஒரு காரியத்தை அவனால் வலிந்து செய்யமுடியாது. எனவே தாஸ் மீது கொலைக்கு உடந்தையாக இருந்த குற்றம்சாரும்.

பிரிவு – 301

## ஒருவரை கொலை செய்யவேண்டிய நோக்கத்தோடு செய்த செயலால் வேறு ஒருவருக்கு மரணம் விளைவித்தல்

## Culpable Homicide by causing death of person other than person whose death was intended

ஒருவருக்கு மரணத்தை உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது மரணம் உண்டாக்கும் என்று தெரிந்து ஒரு செயல் புரியப்படுகின்றது. அந்த செயலின் விளைவாக வேறு ஒருவருக்கு மரணம் சம்பவிக்கின்றது. ஆனால் காரியத்தை செய்தவருக்கு இரண்டாவதாக குறிப்பிட்டுள்ள நபரை கொலை செய்யவேண்டும் என்ற கருத்தோ அல்லது தன் செயலால் அவருக்கு மரணம் சம்பவிக்கும் என்ற தெளிவோ இல்லை. ஆகவே, அவர் மீது கொலைக்குற்றம் சாராது. எண்ணியதற்கு மாறாக வேறு ஒரு நபர் மரணம் அடைந்தால் யாரைக்குறித்து செயல்பட்டாரோ, அதற்காகவே மரணம் விளைவித்த குற்றம் அவரைச்சாரும்.

பிரிவு – 302

## கொலைக்குற்றத்திற்கான தண்டனை

## Punishment for Murder

கொலைக்குற்றம் புரிந்தவனுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள்தண்டனை விதிக்கப்படுவதுடன் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு – 303

## ஆயுள்தண்டனை கைதி கொலைசெய்ததற்கான தண்டனை

## Punishment for Murder by Life Convict

ஆயுள்தண்டனை பெற்றுச் சிறையில் இருக்கும் கைதி கொலைக்குற்றம் புரிந்தால் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்.

பிரிவு – 304

## கொலைக் குற்றம் ஆகாத மரணம் விளைவித்த குற்றத்திற்கான தண்டனை

## Punishment for Culpable Homicide Not Amounting to Murder

கொலைக் குற்றம் ஆகாத, மரணம் விளைவிக்கும் குற்றத்தைப் புரிந்தவனுக்கு, அவன் அந்த குற்றத்தை, மரணத்தை உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது தன்னுடைய செயலால் மரணம் சம்பவிக்கும் என்ற தெளிவுடன் அந்தக் குற்றத்தைப் புரிந்திருந்தால், ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரையில் சிறைக் காவலைத் தண்டனையாக விதிப்பதுடன் அபராதமும் விதிக்கப்டும்.

மரணம் உண்டாக்க வேண்டும் என்ற கருத்து இல்லாமல் அல்லது மரணத்தை விளைவிக்கத் தக்க உடல் காயத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற கருத்தின்றி அவன் செய்த காரியத்தால் மரணம் விளைந்திருந்தால், அவனுக்கு பத்து ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 304 - A

## அஜாக்கிரதையாக மரணம் விளைவித்தல்

## Causing Death by Negligence

மரணத்தை விளைவிக்கும் குற்றத்தில் அடங்காத எந்தச்செயலையும் அசட்டு துணிச்சலாக அல்லது அஜாக்கிரதையாகச் செய்து அதனால் யாருக்காவது மரணம் ஏற்பட்டால், அந்த செயலைப்புரிந்தவருக்கு இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 304 — B

## DOWRY DEATH

ஒரு பெண்ணின் மரணம் தீக்காயங்களினால் அல்லது உடம்பில் ஏற்பட்ட காயங்களினால் ஏற்பட்டிருந்தால் கல்யாணமாகி ஏழு ஆண்டுகளுக்குள் அந்த சம்பவம் ஏற்பட்டிருந்தாலும், மேலும் அவள் மரணமடைவதற்கு சற்றுமுன் அவளுக்கு தன் கணவரால் அல்லது கணவரின் உறவினர்களால் கொடுமைப்படுத்தப்பட்டதாக தெரிந்தாலோ அல்லது வரதட்சணைகேட்டு தொந்தரவு நடந்ததாக தெரிந்தாலோ, அந்த மரணம் வரதட்சணை கொடுமை மரணம் என்று சொல்லப்படுவதுடன், அவள் கணவன் அல்லது கணவனின் உறவினர் அந்த மரணத்தை உண்டு பண்ணியதாக கருதப்படும்.

வரதட்சணை என்பது வரதட்சணை தடை சட்டம், 1961 பிரிவு - 2ல் கூறியுள்ளபடி வரதட்சணை கொடுமையில் மரணம் செய்தவர்களுக்கு 7 வருடத்திற்கு குறையாதது முதல், ஆயுள் தண்டனை வரை கொடுக்கப்படலாம்.

பிரிவு — 305

## குழந்தைகள், புத்தி சுவாதீனம் இல்லாதவர்களை தற்கொலை செய்ய தூண்டுதல்

## Abetment of Suicide of Child or Insane Person

பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர் அல்லது சித்த சுவாதீனம் இல்லாதவர் அல்லது புத்திக் கோளாறு உள்ள மயக்க நிலையில் இருப்பவர் அல்லது பிறவி முட்டாள் ; அல்லது குடிபோதையில் உள்ளவர் ஆகியவர்களில் யாராவது தற்கொலை செய்து கொள்வதற்கு ஒருவர் உடந்தையாக இருப்பது குற்றமாகும். இந்தக் குற்றத்துக்காக மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் தண்டனையாக விதிப்பதுடன் அபராதமும் விதிக்கப்படவேண்டும்.

பிரிவு — 306

## தற்கொலைக்கு தூண்டுதல்

## Abetment of Suicide

யாராவது தற்கொலை செய்து கொண்டால் அப்படித் தற்கொலை செய்து கொள்வதற்கு உடந்தையாக இருந்தவருக்கு, பத்து ஆண்டுகள் வரை சிறைக் காவலைத் தண்டனையாக விதிப்பதுடன் அபராதமும் விதிக்கப்பட வேண்டும்.

பிரிவு – 307

## கொலை செய்ய முயற்சி செய்தல்
## Attempt to Murder

ஒருவருக்கு மரணத்தை உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது தன் செயலால் அத்தகைய மரணம் சம்பவிக்கும் என்ற தெளிவுடன் செயல் செய்யப்பட்டால், அது செய்யப்படும் சூழ்நிலையை அனுசரித்துக் கொலைக் குற்றம் செய்வதற்கான முயற்சி என்று முடிவாக்கப்படுகிறது. இதற்கு காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும். அந்தக் குற்ற முயற்சியால் யாருக்காவது காயம் ஏற்பட்டால் குற்றவாளிக்கு ஆயுள்தண்டனை அல்லது இதற்குமுன் சொல்லப்பட்டதைப்போல சிறைக்காவல் தண்டனை விதிக்கபட்டும்.

இந்த பிரிவின் கீழ் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் காவலில் இருக்கும் பொழுது குற்றம் புரிந்து, அதனால் யாருக்காவது காயம் நேரிட்டால் அந்த கைதிக்கு மரண தண்டனை விதிக்கப்படும்.

***உதாரணம் :***

ஒரு குழந்தையைக் கொல்ல வேண்டும் என்ற கருத்துடன் அதனை யாருமில்லாத ஓர் இடத்தில் போட்டுவிடுகின்றனர். அதனால் அந்தக் குழந்தை மரணம் அடையாவிட்டாலும், குழந்தையை அங்கே போட்டவன், இந்தப் பிரிவின் கீழ் குற்றவாளியாகிறான்.

பிரிவு – 308

## கொலையாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்தைச்செய்ய முயற்சித்தல்
## Attempt to Commit Culpable Homicide

ஒருவன் ஒருகுறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு காரியத்தைப் புரிகிறான். ஒருவருக்கு மரணத்தை உண்டாக்கவேண்டும் என்ற கருத்துடன் அல்லது அத்தகைய மரணம் உண்டாகும் என்ற தெளிவுடன் அந்தக்காரியம் செய்யப்படுகின்றது. அந்தக் காரியத்தின் விளைவால் மரணம் சம்பவித்தால், குற்றம்புரிந்த நபருக்கு கொலைக்குற்றம் ஆகாத மரணத்தை விளைவிக்கும் குற்றம்சாரும் என்றால் மரணம் விளையாவிடினும், குற்றவாளிக்கு மரணத்தை விளைவிக்க முயற்சி செய்ததற்காக மூன்று ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

அந்தக் காரியத்தின் விளைவாக யாருக்காவது காயம் ஏற்பட்டால், குற்றவாளிக்கு ஏழு ஆண்டுகள்வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

***உதாரணம் :***

ஒருவரை நோக்கி ஆத்திரத்தில் திடீரென்று கடுஞ்சினம் ஊட்டப்பட்ட நிலையில் மற்றொருவர் சுடுகிறார். அதனால் மரணம் நிகழ்ந்தால், சுட்டவர் மீது கொலைக்குற்றம் ஆகாத மரணம் விளைவிக்கும் குற்றம் சாட்டப்படும். ஆகவே, மரணம் நிகழாதபோது, சுட்டவர் மீது, மரணத்தை விளைவிக்க முயற்சிசெய்த குற்றம்சாரும்.

பிரிவு — 309

## தற்கொலை செய்ய முயற்சித்தல்

## Attempt to Commit Suicide

யாராவது தற்கொலை செய்துகொள்வதற்கு முயற்சி செய்து, அதற்கென ஏதாவது ஒரு செயலைப் புரிந்திருந்தால், அந்த குற்றத்திற்காக ஓர் ஆண்டுக்கு உட்பட்ட வெறுங்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 317

## பன்னிரண்டு வயதிற்குட்பட்ட குழந்தையை அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் நிராதரவாக விட்டுவிடுதல்

## Exposure and Abandonment of Child Under Twelve Years, by Parent or Person having Care of it

பன்னிரண்டு வயதுக்குக் குறைவான குழந்தையை அதனுடைய தந்தை அல்லது அதனை காக்கும் பொறுப்புவுடையவர் யாரேனும், அந்த குழந்தையை நிராதரவாக விட்டுவிட வேண்டும் என்ற கருத்துடன் ஏதாவது ஓர் இடத்தில் தனியே விட்டுவிடுவது குற்றமாகும். இந்த குற்றத்திற்கு 7 ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 318

## இறந்த குழந்தையின் சடலத்தை இரகசியமாக மறைத்தல்

## Concealment of Birth by Secret Disposal of Dead Body

ஒரு குழந்தை பிறப்பதற்குமுன் அல்லது பிறக்கும்பொழுது அல்லது பிறந்தபின் மரணமடைத்திருக்கலாம். அந்தக்குழந்தையை இரகசியமாகப் புதைப்பதோ அல்லது வேறு எந்த வகையிலாவது அந்தகுழந்தையின் சடலத்தை மறைத்து விடுவதோ குற்றமாகும். ஏனெனில், குழந்தையின் பிறப்பை மறைக்கவேண்டும் அல்லது மறைக்க முயற்சிசெய்ய வேண்டும் என்ற கருத்துடன், இந்தச்செயல் புரியப்படுகின்றது. இந்தக் குற்றத்திற்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 319

## காயப்படுத்துதல்
## Hurt

ஒருவருடைய உடலுக்கு ஏதேனும் வலி, நோய் அல்லது குறைப்பாட்டினை உண்டாக்குவதைக் காயப்படுத்துதல் என்று கூறப்படும்.

பிரிவு — 320

## கொடுங்காயம்
## Grievous Hurt

கொடுங்காயம் என்று கூறப்படுவது யாதெனில்,-

1. ஆண்மை இழக்கச்செய்தல் (ஆண் பீஜங்களை நசுக்கிச் செயல் இழக்கும்படி செய்தல்)
2. நிரந்தரமாக, ஏதாவது ஒரு கண் பார்வையை இழக்கும்படி செய்தல்
3. காதில் ஒன்று செவிடாகும்படி செய்தல்
4. உடல் உறுப்புகளில் ஒன்றை அல்லது இணைப்புகளில் ஒன்றைச் செயல்புரிய ஒட்டாமல் தடுத்தல்
5. உடல் உறுப்புகளில் ஏதேனும் ஒன்றினை அல்லது இணைப்புகளில் ஏதேனும் ஒன்றினை நிரந்தரமாகச் செயல் இழக்கும்படி செய்தல்
6. தலையை அல்லது முகத்தை நிரந்தரமாக உருக்குலைத்தல்
7. எலும்பு முறிவு அல்லது பல்லை உடைத்தல்
8. உயிருக்கு ஆபத்தை உண்டாக்கக் கூடிய காயம் அல்லது காயம்பட்டவருக்கு இருபது நாட்களுக்குக் கொடுந்துன்பம் தரக்கூடிய காயம் அல்லது இருபது நாட்களுக்கு வழக்கமாகச் செய்யக்கூடிய வேலைகளைச் செய்யாமல் தடுக்கக்கூடிய காயம் ஆகியவையாகும்.

பிரிவு — 321

## வேண்டுமென்றே காயப்படுத்துதல்
## Voluntarily Causing Hurt

ஒருவருக்கு காயம் உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது செயலால் அத்தகைய யாருக்காவது காயம் ஏற்பட்டால், அதனைச் தன்னிச்சையாகக் காயப்படுத்துதல் என்று கூறப்படும்.

பிரிவு — 322

## வேண்டுமென்றே கொடுங்காயப்படுத்துதல்
## Voluntarily Causing Grievous Hurt

கொடுங்காயப்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் அல்லது செயலால் அப்படிக் கொடுங்காயம் ஏற்படும் என்ற தெளிவுடன் தன்னிச்சையாக காயப்படுத்தும் செயலால் யாருக்காவது கொடுங்காயம் ஏற்பட்டால் அதனைத் தன்னிச்சையாகக் கொடுங்காயப்படுத்துதல் என்று கூறப்படும்.

பிரிவு - 323

## தன்னிச்சையாகக் காயம் ஏற்படுத்துவதற்கான தண்டனை
## Punishment for Voluntarily Causing Hurt

தன்னிச்சையாகக் காயப்படுத்தும் செயலை யார் புரிந்தாலும் ஓர் ஆண்டு வரை சிறைக்காவல் அல்லது ஆயிரம் ரூபாய்கள் வரை அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும் (334 – ஆவது பிரிவின்படி இந்த செயல் புரியப்பட்டிருந்தால் இந்தப்பிரிவு பொருந்தாது).

பிரிவு — 324

## பயங்கரமான ஆயுதம் அல்லது வேறு வழிகளால் தன்னிச்சையாக காயம் ஏற்படுத்துதல்
## Voluntarily Causing Hurt by Dangerous Weapons or Means

துப்பாக்கி, குத்துவாள், சுத்தி, அரிவாள் போன்றவை மரணத்தை விளைவிக்கப் பயன்படுத்தக்கூடியவை. அதே போல் நெருப்பும், நெருப்பில் காய்ச்சப்பட்ட கருவிகளும் அத்தகைய அபாயத்தை விளைவிக்கக்கூடியவை விஷம், வெடி மருந்து, துருப்பிடிக்கச் செய்யும் பொருட்கள், இன்னும் மனிதர்களுடைய சுவாசத்தில், உள்ளுறுப்புகளில் அல்லது ரத்தத்தில் கலப்பதன் மூலம் அத்தகைய அபாயத்தை உண்டாக்ககூடும் மிருகத்தாலும் அது சாத்தியமே, எனவே இவற்றில் ஏதாவது ஒன்றைப்பயன்படுத்தி தன்னிச்சையாகக் காயம் உண்டாக்குவது குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும் (334 –ஆவது பிரிவில் விளக்கப்பட்டுள்ளபடி இத்தகைய செயல் புரியப்பட்டிருந்தால் இந்தத் தண்டனை பொருந்தாது).

பிரிவு — 325

## தன்னிச்சையாக கொடுங்காயம் ஏற்படுத்தியதற்கான தண்டனை
## Punishment for Voluntarily Causing Grievous Hurt

335–ஆவது பிரிவில் கூறப்பட்டள்ளபடியன்றி வேறு எவ்விதமாகவும் தன்னிச்சையாகக் கொடுங்காயம் உண்டாக்கினால், அந்த நபருக்கு ஏழு ஆண்டுகள் வரை சிறைக்காவலுடன் தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

பிரிவு 326

## தன்னிச்சையாக பயங்கரமான ஆயுத்தால் அல்லது வேறு வழிகளினால் கொடுங்காயம் ஏற்படுத்துவதற்கான தண்டனை
## Voluntarily Causing Grievous Hurt by Dangerous Weapons or Means

மரணத்தை உண்டாக்குவதற்காகச் (துப்பாக்கியால்) சுடுதல், குத்துதல், வெட்டுதல் ஆகியவற்றிற்காக பயன்படும் கருவிகளால் அல்லது மரணத்தை உண்டாக்கக்கூடிய விதத்தில் நெருப்பு, நெருப்பில் காய்ச்சப்பட்ட பொருட்கள் அல்லது மரண அபாயத்தை உண்டாக்கக்கூடிய விஷம், வெடி மருந்துகள்,

துருப்பிடிக்கச் செய்யும் பொருட்கள் அல்லது மனிதரின் சுவாசத்தில் உள்ளுறுப்புகளில் அல்லது இரத்தத்தில் கலந்து, அத்தகைய அபாயத்தை உண்டாக்கக்கூடிய பொருட்கள் அல்லது மிருகங்கள் ஆகியவற்றைத் தன்னிச்சையாக பயன்படுத்தி அதனால் யாருக்காவது கொடுங்காயம் ஏற்பட்டால் அந்த நபருக்கு, ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைக்காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 332

## பொதுஊழியரை அவருடைய கடமையைச் செய்யவிடாமல் தன்னிச்சையாக தடுத்தல் அல்லது காயப்படுத்துவதற்கான தண்டனை

## Voluntarily Causing Hurt to Deter Public Servant from his Duty

ஒரு பொதுஊழியரைத் தம் கடமையைச் செய்யாமல் தடுக்கவேண்டும் என்ற கருத்துடன் அல்லது சட்ட பூர்வமாக அவர் செய்யவிருக்கும் பணியைத் தடுப்பதற்காக அல்லது சட்டபூர்வமாகக் கடமை ஆற்றும் நிலையிலுள்ள ஒரு பொதுஊழியர் என்கிற முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது அவரைத் தன்னிச்சையாகத் தாக்கிக் காயப்படுத்தினால் மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 333

## பொதுஊழியரை அவருடைய கடமையைச் செய்யவிடாமல் தடுப்பதற்கு தன்னிச்சையாக கொடுங்காயம் ஏற்படுத்துதல்

## Voluntarily Causing Grievous Hurt to Deter Public Servant from his Duty

ஒரு பொதுஊழியரைத் தம்முடைய கடமையை செய்யாமல் தடுக்கவேண்டும் என்ற கருத்துடன் அல்லது சட்டபூர்வமாக அவர் செய்யவிருக்கும் பணியைத் தடுக்கவேண்டும் என்ற கருத்துடன் அல்லது அவர் தாம் ஒரு பொதுஊழியர் என்ற நிலையில் தம் பதவியிலிருந்து காரியம் ஆற்றும் பொழுது அவரை தன்னிச்சையாகக் கொடுங்காயப்படுத்துதல் குற்றமாகும். இந்த குற்றத்திற்கு பத்து ஆண்டுகள் வரை சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

பிரிவு – 337

## உயிருக்கு (அ) தனி நபருடைய பாதுகாப்பிற்கு ஒரு செயலால் காயம் ஏற்படுத்துதல்

## Causing Hurt by Act Endangering Life or Personal Safety of Others

மனித உயிருக்கு அபாயத்தை உண்டாக்கக்கூடிய அல்லது பிறருடைய பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்ககூடிய எந்த செயலையாவது, அசட்டு துணிச்சலுடன் அல்லது கவனக்குறைவாக யாராவது புரிந்து அதனால் யாருக்காவது காயம் ஏற்பட்டால் அந்த செயலை புரிந்த நபருக்கு ஆறு மாதங்கள் வரை அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 338

## உயிருக்கு அல்லது தனி நபருடைய பாதுகாப்பிற்கு ஒரு செயலால் கொடுங்காயம் ஏற்படுத்துதல்

## Causing Grievous Hurt by Act Endangering Life or Personal Safety of Others

மனித உயிருக்கு அபாயத்தை உண்டாக்கும் விதத்தில் அல்லது பிறருடைய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் முறையில் அசட்டுத் துணிச்சலுடன் அல்லது கவனக்குறைவாக செய்யப்படும்,

எந்தச் செயலினாலாவது, யாருக்காவது கொடுங்காயம் ஏற்பட்டால், அந்தச் செயலைப்புரிந்த நபருக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 339

**முறையற்ற தடுப்பு**

## Wrongful Restraint

ஒரு குறிப்பிட்ட திசையில் செல்வதற்கு உரிமைபெற்ற நபரை தன்னிச்சையாக தடுத்து அந்த திசையில் அவரை செல்லவிடாமல் நிறுத்துவதை முறையற்ற தடுப்பு என்று கூறப்படுகிறது.

பிரிவு – 340

**முறையற்று சிறையிடுதல்**

## Wrongful Confinement

ஒரு குறிப்பிட்ட வரம்பை மீறி செல்ல முடியாதபடி ஒரு நபரை முறையற்று தடுப்பதை முறையற்று சிறையிடுதல் என்று கூறப்படுகிறது.

பிரிவு – 341

**முறையற்ற தடுப்புக்கு தண்டனை**

## Punishment for Wrongful Restraint

எந்த நபரையும் முறையற்றுத் தடுப்பது குற்றமாகும். இந்த குற்றத்திற்கு ஒரு மாதம் வரை வெறுங்காவல் அல்லது ஐந்நூறு ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 342

**எந்த நபரையும் முறையற்று சிறை வைப்பது குற்றமாகும்**

## Punishment for Wrongful Confinement

இந்த குற்றத்திற்கு ஒரு ஆண்டு வரை சிறைக்காவல் அல்லது 1000 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 349

**தாக்குதல்**

# Force

**வன்முறைத் தாக்குதலும் தாக்க முனைதலும்**

## Criminal Force and Assault

ஒருவனுடைய உடலை அசைப்பது, அசையாமல் தடுப்பது, அல்லது அசைவில் மாற்றத்தை உண்டாக்குவதும், ஒரு பொருளை அசைத்து, அசையாமல் தடுத்து அல்லது அதனுடைய அசைவில் மாற்றத்தை உண்டாக்குவது ஆகியவற்றின் மூலம் அந்த பொருள் ஒருவருடைய உடலின் ஒரு பிரிவு அல்லது அவர் அணிந்திருக்கும் ஆடை அல்லது வைத்திருக்கும் பொருள் அல்லது அவருடைய

உணர்வைத் தொடக்கூடிய ஒரு பொருளைத் தொடுவது ஆகியவற்றில் எதனைப் புரிந்தாலும், அந்த நபர் தாக்குதல் செய்கிறார் என்று கூறலாம்.

அத்தகைய அசைவு அசைவில் மாற்றம் அல்லது அசைவைத் தடுக்கும் செயல், கீழே சொல்லப்பட்டுள்ள மூன்று வகையாக நடைபெறலாம்.

முதலாவதாக தன்னுடைய உடல் பலத்தைப்பயன்படுத்தி அத்தகைய செயல் நடைபெறலாம். இரண்டாவதாக, ஒரு பொருளை அசைப்பதன்மூலம் மேற்கண்ட அசைவினை உண்டாக்கலாம்.

மூன்றாவதாக, ஒரு மிருகத்தை அசையச்செய்து அதன் அசைவில் மாற்றத்தை ஏற்படுத்த அல்லது அசைவை நிறுத்தி அந்தச் செயல் நடைபெறலாம்.

பிரிவு — 350

**வன்முறைத் தாக்குதல்**

## Criminal force

ஒருவருடைய சம்மதமின்றி அவரைத் தாக்கும்போது ஒரு குற்றத்தை புரியவேண்டும் என்ற கருத்துடன் அத்தகைய தாக்குதலால் காயம். அச்சம் அல்லது தொல்லைத் தரவேண்டும் என்ற கருத்துடனும் அல்லது தெளிவுடனும் அத்தகைய தாக்குதல் நடைபெற்றிருக்கும் போது அதனை வன்முறைத் தாக்குதல் என்கிறோம்.

பிரிவு — 351

**வன்முறையில் தாக்க முனைதல்**

## Assault

ஒருவர் தம் எதிரிலுள்ள மற்றொருவரை வன்முறையில் தாக்கப்போவதாக அச்சுறுத்தும், கருத்துடன் ஒரு சைகையோ அல்லது ஓர் ஆயத்தமோ செய்தால் அதனை வன்முறையில் தாக்க முனைதல் என்று கூறுகிறோம்..

***விளக்கம் :***

வெறும் பேச்சுமட்டும் இந்த குற்றத்தின்பால் படாது. ஆனால் அவனுடைய சைகை அல்லது ஆயத்தத்துக்கு அந்த பேச்சு தரும் பொருள் அதனை வன்முறையில் தாக்க முனைதலாகக் கொள்ளும்படி செய்யக்கூடும்.

பிரிவு - 353

**வன்முறை செயலால் ஒரு பொதுஊழியரை தன்னுடைய கடமையை செய்யவிடாமல் தடுத்தல்**

## Assault or Criminal Corce to Deter Public Servant from Discharge of his Duty

ஒரு பொதுஊழியர், சட்டப்படி தனக்குள்ள கடமையை செய்யவரும்போது அப்படி கடமையாற்ற விடாமல் அவரை தாக்க வேண்டும் அல்லது தாமதப்படுத்த வேண்டும் என்ற கருத்துடனும் அல்லது அப்படி கடமையாற்றுவதன் விளைவாகவோ அல்லது அப்படி கடமையாற்ற முயலும்போதோ அவரிடத்தில் வன்முறை தாக்குதல் அல்லது தாக்க முனைதல் குற்றமாகும். இந்த குற்றத்திற்கு

இரண்டு ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 354

## வன்முறையால் பெண்ணை மானபங்கப்படுத்துதல்
## Assult or Criminal force to Women with Intent to Outrage her Modesty

ஒரு பெண்ணுடைய அடக்க உணர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது தெளிவுடன் அவளை வன்முறையில் தாக்குவதும், தாக்க முனைவதும் குற்றமாகும். இந்த குற்றத்திற்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 359

## KIDNAPPING

ஆளை கவர்தல் என்பது இரண்டு வகைப்படும். அவை (1) இந்தியாவில் இருந்து கவர்தல் (2) சட்டபூர்வமான பாதுகாப்பாளரிடமிருந்து கவர்தல்.

பிரிவு – 360

## இந்தியாவிலிருந்து கவர்ந்து செல்லுதல்
## Kidnapping from India

ஒருவருடைய சம்மதத்தைப்பெறாமல் அல்லது அவருடைய சார்பில் சட்டபூர்வமாக அத்தகைய சம்மதத்தை கொடுக்ககூடிய நபருடைய சம்மத்தைப்பெறாமல் அவரை இந்திய எல்லைக்கு வெளியே கொண்டுபோவதை இந்தியாவில் இருந்து ஆளை கவர்ந்து செல்வது என்று கூறப்படும்.

பிரிவு – 361

## பெற்றோர் பாதுகாப்பாளரிடமிருந்து கடத்திச் செல்லுதல்
## Kidnapping from Lawful Guardianship

பதினாறு வயதுக்கு குறைந்த ஓர் ஆணை அல்லது பதினெட்டு வயதுக்குக் குறைந்த பெண்ணை அல்லது சித்தசுவாதீனம் இல்லாத ஒரு நபரை அவர்களை காக்கக் கடமைப்பட்ட பாதுகாவலரின் சம்மதம்பெறாமல், ஆசை காட்டி இழுத்துக்கொண்டு அல்லது தூக்கிக் கொண்டு போவதைச் சட்டபூர்வமான பாதுகாப்பில் இருந்து கவர்ந்துசெல்லுதல் என்று கூறப்படும்.

***விளக்கம்:***

'பாதுகாவலர்' என்ற சொல் அத்தகைய நபரைப் பராமரிக்கும் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள எவரையும் குறிக்கலாம்.

***விதிவிலக்கு:***

முறைகேடாகப் பிறந்த குழந்தைக்குத் தான்தகப்பன் என்ற நல்ல எண்ணத்துடன் அந்தக் குழந்தையை எடுத்துச்செல்வது, இந்த பிரிவின்பால் படாது. ஒரு நபரைப் பராமரித்துப் பாதுகாக்கும் பொறுப்பு தனக்கு இருக்கிறது என்ற நல்லெண்ணத்துடன் அப்படி செய்வதும் குற்றமாகாது.

பிரிவு – 362

### கடத்திச் செல்லுதல்

## Abduction

வன்முறையாலோ அல்லது ஏமாற்றக்கூடிய முறைகளாலோ, ஒருவரை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு செல்லும்படி கட்டாயப்படுத்துவது கடத்திச்செல்லுதல் எனப்படும்.

பிரிவு – 363

### கவர்ந்து செல்வதற்கான தண்டனை

## Punishment for Kidnapping

ஒரு நபரை இந்தியாவுக்கு வெளியே கவர்ந்து சென்றாலும், இந்தியாவுக்கு உள்ளே சட்டபூர்வமான பாதுகாவலரிடமிருந்து கவர்ந்து சென்றாலும் ஏழு ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 363 – A

### பிச்சையெடுப்பதற்காக இளம் சிறுவர்களை கவர்தல் அல்லது முடம் ஆக்குவதற்கான தண்டனை

## Kidnapping or Maiming a Minor for Purposes of Begging

பிச்சைகாரர்களாக வேலைசெய்ய அல்லது பிச்சையெடுப்பதற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் இளஞ்சிறுவர்களைக் (சிறுமியரை) கவர்தலும் அல்லது அவர்களைச் சட்டபூர்வமாகப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்களின் பொறுப்பிலிருந்து கொண்டுபோவதும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு பத்து ஆண்டுகள் வரை சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

பிச்சை எடுப்பதற்குப் பயன்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் இளஞ்சிறுவர்களை (சிறுமியர்) அங்கஹீனப்படுத்துவோருக்கு ஆயுள் தண்டனையுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

சட்டபூர்வமான பாதுகாக்கும் கடமையுள்ளவர்களைத் தவிர மற்றவர்கள் இளஞ்சிறுவர்களைப் பிச்சையெடுப்பதற்குப் பயன்படுத்தினால், அந்த நபர் அத்தகைய சிறுவரைக் கவர்ந்துவந்து அல்லது பிச்சையெடுப்பதற்கென்றே சட்டப்பூர்வமான பாதுகாப்பிலிருந்து தன்னுடைய பொறுப்புக்குக் கொண்டுவந்து வைத்திருப்பதாகவே கொள்ளப்படும் (தான் நிரபராதி என்பதை நிரூபிக்கும் பொறுப்பு அந்த நபரையே சாரும்).

***இந்தப் பிரிவில்,-***

**(a) பிச்சை எடுத்தல் என்பது:**

i) பாடுவது, ஆடுவது, சோதிடம் கூறுவதும் வித்தைகள் புரிவது பண்டங்களை விற்பது என்ற முறைகளில் நடித்துப் பொதுஇடங்களில் தர்மம் கேட்டுப்பெறுவதையும்.

ii) தர்மம் கேட்டும் அல்லது பெறும் நோக்கத்துடன் தனிப்பட்டவர்களின் இடங்களுக்குச் செல்வதையும்.

iii) தன் உடம்பில் அல்லது மற்றொருவருடைய உடம்பில் அல்லது மிருக்கதிடம் உள்ள புண், காயம், குறைபாடு நோய் அல்லது தீங்கை, தர்மம் பெற வேண்டும், காசு பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் காட்டுவதையும்.

iv) இளஞ்சிறுவர்களை (சிறுமியர்) தர்மம் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் காட்டுவதும் ஆகியவற்றைக் குறிக்கும்.

**(b) சிறுவர் (சிறுமியர்) என்பது**

(i) பதினாறு (16) வயதுக்கு உட்பட்ட ஆணையும்

(ii) பதினெட்டு (18) வயதுக்கு உட்பட்ட பெண்ணையும் குறிக்கும்.

பிரிவு – 366

## பலாத்காரமாக ஒரு பெண்ணைத் திருமணத்திற்காகக் கவர்தல், கடத்தி செல்லுதல், தூண்டுதல் போன்றவை

## Kidnapping, Abducting or Inducing Women to Compel her Marriage etc.

ஒரு பெண்ணைப் பலாத்காரமாக வேறு ஒருவருக்கு திருமணம் செய்துவைக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது அப்படி அவளுடைய விருப்பத்துக்கு விரோதமாகத் திருமணம் செய்துவைக்கப்படும் என்று தெரிந்திருந்தும் கவர்ந்து செல்வது அல்லது கடத்தி செல்வது குற்றமாகும். அவளுடைய விருப்பத்துக்கு விரோதமாகப் பலாத்காரப்படுத்தி உடல் புணர்ச்சி கொள்வதற்காக அல்லது அத்தகைய உடல் புணர்ச்சிக்கு அவள் உட்படுத்தப்படுவாள் என்று தெரிந்திருந்தும், அந்தப் பெண்ணைக் கவர்தல் அல்லது கடத்திச் செல்லுதல் குற்றமாகும். இந்தக் குற்றத்துக்குப் பத்து ஆண்டுகள்வரை சிறைக் காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

தன்னுடைய அதிகாரத்தைத் தவறாகப்பயன்படுத்தி அல்லது குற்றத் தலையீட்டால் அல்லது வேறு எவ்விதமான கட்டாயத்தாலும் ஒரு பெண்ணை அவளுடைய சம்மதமின்றிப் பிறருடைய புணர்ச்சிக்கு ஆட்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் ஓர் இடத்தை விட்டு நீங்கும்படி தூண்டுகின்றவர்களும் இந்தப் பிரிவின்படி தண்டனைக்கு உரியவர்களாவர்.

பிரிவு – 366 – A

## இளம்பெண்ணை கட்டாயப் புணர்ச்சிக்கு ஆட்படுத்துதல்

## Procuration of Minor Girl

பதினெட்டு வயதுக்கும் குறைந்த ஒரு பெண்ணை, பிறருடன் கட்டாயப்புணர்ச்சிக்கு உட்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் அல்லது அத்தகைய புணர்ச்சிக்கு அந்தப் பெண் உட்படுத்தப்படுவாள் என்று தெரிந்திருந்தும், அவளை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும்படி, எந்த வகையில் தூண்டினாலும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்குப் பத்து ஆண்டுகள் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 375

## வன்முறைப் புணர்ச்சி
## Rape

விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள முறையிலன்றி கீழ்வரும் ஆறு வகையான உடலுறவுகளில் எதனை ஓர் ஆண் மேற்கொண்டாலும், அந்த ஆண் வன்முறைப் புணர்ச்சியில் ஈடுபட்ட குற்றம் புரிந்தவராகக் கருதப்படுவார்.

முதலாவது – ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு விரோதமாக

இரண்டாவது – அவளுடைய சம்மதமின்றி

மூன்றாவது – அவளுக்கு அல்லது அவளுக்கு நெருக்கமான ஒருவருக்கு மரணம் அல்லது காயம் விளைவிக்கப்படும் என்ற அச்சுறுத்தலின் பேரில் அவளுடைய சம்மதத்தைப் பெற்று

நான்காவது – அவளுடைய சம்மதத்துடன் அத்தகைய உடல் உறவு மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அத்தகைய சம்மதத்தினை அளிக்கும்போது அந்தப் பெண் சித்தசுவாதீனமற்று இருந்ததால் அல்லது அந்த ஆண் மகனால் அல்லது அவருக்கு அடங்கி வேறொருவரால் போதையூட்டக்கூடிய, மயக்கம் உண்டாக்கக்கூடிய ஒரு பொருள் அளிக்கப்பட்டிருந்ததன் விளைவாக அந்தப் பெண்

ஐந்தாவது – அவளுடைய சம்மதத்துடன் அத்தகைய உடல் உறவு மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அத்தகைய சம்மதத்தினை அளிக்கும்போது அந்தப் பெண் சித்தசுவாதீனமற்று இருந்தால் அல்லது அந்த ஆண் மகனால் அல்லது அவருக்கு அடங்கிய வேறொருவரால் போதையூட்டக்கூடிய அல்லது மயக்கம் உண்டாக்கக்கூடிய ஒரு பொருள் அளிக்கப்பட்டிருந்ததன் விளைவாக அந்தப் பெண், தான் எதற்காக அத்தகைய சம்மதத்தை அளித்திருக்கிறோம் என்பதைப்பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் அறியமுடியாத சூழ்நிலையில் அத்தகைய சம்மதத்தை அளித்திருக்கும்போது;

ஆறாவது – அவள் பதினெட்டு வயது பூர்த்தியடையாதபோது அவளுடைய சம்மத்தைப்பெற்றும், பெறாமலும் மேற்கொள்ளப்படும் உடலுறவு வன்முறைப்புணர்ச்சியாகும்.

***விளக்கம் :***

ஆண் குறியைச் சிறிதளவு பெண் குறிக்குள் நுழைத்தாலும் வன்முறைப்புணர்ச்சி என்ற குற்றத்துக்கான உடல் புணர்ச்சி நடைபெற்றதாகக் கொள்ளப்படும்.

***விதிவிலக்கு:***

பதினெட்ட வயது பூர்த்தியடைந்துள்ள மனைவியுடன் உடல் புணர்ச்சிசெய்யும் கணவன் மீது வன்முறைப்புணர்ச்சி செய்த குற்றம் ஆகாது.

பிரிவு – 376

## வன்முறைப் புணர்ச்சிக்குரிய தண்டனை
## Punishment for Rape

1. 2-வது கிளைப்பிரிவில் விளக்கப்பட்டுள்ள நிலைகளில் அன்றி வன்முறைப் புணர்ச்சியில் ஈடுபடுகின்ற ஒரு நபருக்கு ஏழாண்டுகளுக்குக் குறையாமலும், ஆனால் பத்தாண்டுகள் அல்லது ஆயுட்காலம் நீடிக்கக் கூடிய சிறைக்காவல் தண்டனையுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

வன்முறைப் புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டவர், அந்த நபரின் மனைவியாகவும், பதினெட்டு வயதுக்குக் குறையாதவராகவும் இருந்தால் அந்த நபருக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது அவ்விரண்டும் தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

எனினும், தாம் தக்கது மற்றும் தனித்தன்மை வாய்ந்தது என்று, கருதி தம் தீர்ப்புரையில் வெளியிடக்கூடிய காரணங்களுக்காக (அந்த நீதிமன்றம்) அந்த நபருக்கு ஏழாண்டுகளுக்கும் குறைவான சிறைக் காவலைத் தண்டனையாக விதிக்கலாம்.

(சிறைக்காவல் என்பது கடுங்காவல் அல்லது வெறுங்காவல் ஆகிய இரண்டில் எதுவாகவேனும் இருக்கலாம்.)

*2. (அ) ஒரு காவல் அலுவலர்.-*

(i) தாம் பணியாற்றும் காவல் நிலையத்தின் வரம்புக்குள் அல்லது

(ii) தாம் பணியாற்றும் காவல் நிலையமாக இருப்பினும் அல்லது அப்படி இல்லாதிருப்பினும் ஒரு காவல் நிலையக் கட்டிடத்தில் அல்லது

(iii) தம் பொறுப்பில் உள்ள அல்லது தமக்கு கீழ் பணிபுரியும் ஒரு காவல் அலுவலின் பொறுப்பில் உள்ள ஒரு பெண்ணிடம் வன்முறைப் புணர்ச்சியில் ஈடுபட்டாலும் அல்லது

ஆ) அரசு ஊழியராக இருக்கும் ஒருவர், தமது பொறுப்பில் உள்ள அல்லது தமக்குக் கீழ் பணியாற்றும் அலுவலர் ஒருவரின் பொறுப்பிலுள்ள பெண்ணிடம் வன்முறைப் புணர்ச்சி செய்தாலும் அல்லது

இ) அமலில் உள்ள சட்டப்படி அமைக்கப்பட்டுள்ள பெண்களுக்கான சிறைக் காவல் விடுதி அல்லது வேறு காப்பிடம், மகளிர் இல்லம், குழந்தைகள் இல்லம் ஆகிய ஒன்றின் நிர்வாகப் பொறுப்பிலுள்ள அல்லது அங்கே பணிபுரியும் ஓர் அரசு ஊழியர் தம் அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தச் சிறைக்காவல் விடுதி, காப்பிடம் அல்லது இல்லம் ஆகியவற்றில் உள்ள ஒரு பெண்ணிடம் வன்முறைப் புணர்ச்சியில் ஈடுபட்டாலும் அல்லது

ஈ) ஒரு மருத்துவமனையில் பணியாற்றும் அல்லது அதன் நிர்வாகப் பொறுப்பில் உள்ள ஓர் அரசு ஊழியர் தம் அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த மருத்துவமனையில் உள்ள ஒரு பெண்ணிடம் வன்முறைப் புணர்ச்சியில் ஈடுபட்டாலும் அல்லது

உ) ஒரு பெண் கருவுற்றிருக்கிறாள் என்று தெரிந்த பின்னர், அந்த பெண்ணுடன் வன்முறைப் புணர்ச்சி செய்தாலும் அல்லது

ஊ) பதினெட்டு வயதுக்குக் குறைவான ஒரு பெண்னை வன்முறைப்புணர்ச்சி செய்தாலும் அல்லது

எ) பலர் ஒன்றாகக் கூடி வன்முறைப் புணர்ச்சியில் ஈடுபட்டாலும் அத்தகைய நபருக்குப் பத்து ஆண்டுகளுக்குக் குறையாத சிறைக்காவல் அல்லது ஆயுட்காலம் வரையில் சிறைக்கால் தண்டனையாக விதிக்கப்பட வேண்டும். மற்றும், அந்த நபருக்கு அபராதமும் விதிக்கலாம்.

எனினும், நாம் தக்கதென்றும் தனித்தன்மை பெற்றதென்றும் தம் தீர்ப்புரையில் குறிப்பிடக் கூடிய காரணங்களுக்காக ஒரு நீதிமன்றம் அந்தத் தண்டனை காலத்தைப் பத்தாண்டுகளுக்குக் குறைவான காலத்துக்குச் சிறைக்காவல் விதிக்கலாம்.

***விளக்கம் - 1:***

இந்தக் கிளைப் பிரிவின்படி, ஒன்றுக்கு மேற்பட்டவர் ஒன்று கூடி ஒரு பெண்ணை வன்முறைப் புணர்ச்சிக்கு ஆளாக்கும் போது, அந்த கூட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும் கூட்டாக வன்முறைப்புணர்ச்சி செய்ததாகக் கருதப்படுவார்கள்.

***விளக்கம் - 2:***

“மகளிர் அல்லது குழந்தைகள் இல்லம்” என்பது பெண்களையும், குழந்தைகளையும் வரவேற்றுப் பாதுகாக்கும் ஓர் இல்லத்தைக் குறிக்கும். அநாதை இல்லம் அல்லது திக்கற்றோர் இல்லம் அல்லது புறக்கணிக்கப்பட்ட பெண்கள் அல்லது கைம்பெண்கள் இல்லம் என்ற இல்லங்களையும் இந்தச் சொல் குறிக்கும்.

***விளக்கம் - 3:***

‘மருத்துவமனை’ என்பது ஒரு மருத்துவமனைக் கட்டடத்தையும் நோயுற்றோர் அல்லது நோய்க்குப் பிறகு உடல் நலத்தைப் பேணிச் சீராக்கும் நிலையில் உள்ளோர் அல்லது புணர்வாழ்வுக்காகத் தங்கியிருக்கும் நபர்கள் மருத்துவ உதவி தேவைப்பட்டோர் அல்லது மருத்துவ உதவி பெற்று வருவோர் உள்ள இடத்தை குறிக்கும்.

### பிரிவு – 376 – A

## கணவன் மனைவி தனித்து வாழும் போது புணர்ச்சி செய்தல்
## Intercourse by a Man with his Wife during Separation

சமூக பழக்க வழக்கங்களின்படி, அல்லது ஒரு நீதிமன்றத்தின் ஆணைப்படி தன்னிடமிருந்து பிரிந்து வாழும் மனைவியுடன், அப்படி அவள் பிரிந்து வாழும் நிலையில் அவளுடைய சம்மதமின்றி உடலுறவு கொள்வது குற்றமாகும். அந்த குற்றத்துக்கு இரண்டு ஆண்டுகள் வரையில் சிறைக்காவலும் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

### பிரிவு – 376 – B

## தன் பொறுப்பில் இருக்கும் பெண்ணை பொதுஊழியர் புணர்ச்சி செய்தல்
## Intercourse by Public Servant with Woman in his Custody

தம் பொறுப்பில் உள்ள அல்லது தமக்குக் கீழ் பணியாற்றும் ஓர் அலுவலரின் பொறுப்பிலுள்ள ஒரு பெண்ணிடம் தம் அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆசைக் காட்டடித் தன் வசம் இழுக்கச் செய்து தம்முடன் உடலுறவு மேற்கொள்ளும்படி ஓர் அரசு ஊழியர் செய்கிறார். அத்தகைய உடலுறவு

வன்முறைப்புணர்ச்சியாக அமையாவிடினும் தண்டனைக்குரிய குற்றமாகும். இரண்டு ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

பிரிவு – 376 – C

## சிறைக்காவல் அதிகாரி அல்லது காவல் இல்ல அதிகாரி தன் பொறுப்பில் உள்ள பெண்ணை உடலுறவு கொள்ளுதல்

## Intercourse by Superintendent of Jail Remand of Home etc.

ஒரு சிறைச்சாலை, காவல் இல்லம் அல்லது அமலில் உள்ள ஒரு சட்டப்படி காவலில் வைக்கத்தக்க இடம் அல்லது மகளிர் அல்லது குழந்தைகள் இல்லம் ஆகியவற்றின் மேலாளர் அல்லது கண்காணிப்பாளராக உள்ள ஒருவர், தம் அதிகாரத்தைப் பயன்படுத்தி அத்தகைய சிறைச்சாலை, காவல் விடுதி , மகளிர் அல்லது குழந்தைகள் இல்லம் ஆகியவற்றில் இருக்கும் ஒரு பெண்ணை ஆசை காட்டி, தம்முடன் உடலுறவு கொள்ளும்படி செய்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். அத்தகைய குற்றம் புரிந்த நபருக்கு ஐந்து ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

***விளக்கம்:***

“கண்காணிப்பாளர்” என்ற சொல், அத்தகைய சிறைச்சாலை, காவல் விடுதி அல்லது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது அதிகாரம் செலுத்தத் தக்க அல்லது பொறுப்பு வகிக்கத்தக்க மற்றப் பதவிகளில் உள்ளவர்களையும் குறிப்பதாகும்.

பிரிவு – 376 – D

## ஒரு மருத்துவமனையின் பொறுப்பில் உள்ளவர் அங்கே வேலை செய்யும் பெண்ணுடன் உடலுறவுக் கொள்ளுதல்

## Intercourse by any Member of the Management or Staff of a Hospital with any Woman in that Hospital

ஒரு மருத்துவமனையின் மேலாண்மைப் பொறுப்பில் உள்ள அல்லது ஒரு மருத்துவமனையின் பணியாளர்களில் ஒருவராக உள்ள ஒரு நபர், தம் பதவியைப் பயன்படுத்தி அந்த மருத்துவமனையில் உள்ள ஒரு பெண்ணுடன் உடலுறவு கொண்டால் அத்தகைய உடலுறவு வன்முறைப் புணர்ச்சியாக இல்லாதிருப்பினும் அந்த நபருக்கு ஐந்து ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட குற்றங்களைப் பற்றிய விசாரணைகளைத் தனியறையில் நடத்துவதற்குரிய பாதுகாப்பினைக் குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் 327 (2) ஆவது என்ற புதிய திருத்தத்தின் மூலம் தந்துள்ளனர்.

பிரிவு – 377

## இயற்கைக்கு மாறான குற்றங்கள்

## Unnatural Offences

ஒருவர் தன்னிச்சையாக, ஓர் ஆணுடன் அல்லது ஒரு பெண்ணுடன் அல்லது ஒரு மிருகத்துடன் இயற்கைக்கு மாறாகப் புணர்ச்சி செய்வது குற்றமாகும். இந்தக் குற்றத்துக்கு ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

## பிரிவு – 498 – A

## கணவரால் அல்லது கணவரின் உறவினரால் பெண்ணிற்கு இழைக்கப்படும் கொடுமைகள்

## Of Cruelty by Husband or Relative of her Husband

ஒரு பெண்ணை, அவளுடைய கணவன் அல்லது கணவரின் உறவினர்களில் ஒருவர் கொடுமைப்படுத்தினால் அந்த நபருக்கு மூன்று ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

***விளக்கம் :***

இந்தப்பிரிவில் வரும் கொடுமைப்படுத்துதல் என்ற சொல் தரக்கூடிய பொருள் யாதெனில்**;**

1. ஒரு பெண்ணைத் தற்கொலை செய்து கொள்ளும்படி தூண்டக்கூடிய அல்லது அவளுடைய உயிருக்கு, உடலுக்கு அல்லது சுகத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய ஒரு செயலைக் குறிக்கும் (அது உடலுக்கு அல்லது உள்ளத்துக்குக் கேடுபயக்கக் கூடியதாகக் கூட இருக்கலாம்.)

2. சட்ட விரோதமாக ஒரு சொத்தை அல்லது மதிப்புள்ள காப்பீட்டை அந்தப் பெண் மூலம் அல்லது அவளுடைய உறவினரிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பெற வேண்டும் என்பதற்காக அல்லது அப்படி அவளால் அல்லது அவளுடைய உறவினரால் அப்படிக் கொடுக்க முடியவில்லை என்பதற்காக அந்தப் பெண்ணுக்குப் பொறுக்க முடியாத சங்கடங்களை உண்டாக்குவதைக் குறிக்கும்.

# அத்தியாயம் - 17
# (CHAPTER – 17)

## சொத்துக்களைப் பற்றிய குற்றங்கள்
## Offences Against Property

### பிரிவு - 378

### திருட்டு
### Theft

ஒருவர் தம் வசம் வைத்திருக்கும் அசையும் பொருளை, அவருடைய சம்மதமின்றி, நாணயமற்ற வகையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்துடன் அந்த பொருளை அப்படி எடுத்துக் கொள்வதற்காக நகர்த்துவதைத் ‘திருட்டு’ என்று கூறுகிறோம்.

***விளக்கம் - 1:***

பூமியுடன் பிணைக்கப்பட்டுள்ள அசையாப்பொருளை, அது பூமியுடன் பிணைக்கப் பட்டுள்ள வரையில் திருட முடியாது. பூமியிலிருந்து பிரிக்கப்பட்டவுடன் அந்த பொருள் திருட்டுக்கு உரிய பொருளாகிறது.

***விளக்கம் - 2:***

அப்படி அந்தப்பொருளைத் திருடுவதற்காகப் பூமியிலிருந்து பிரிக்கும் பொழுது திருட்டுச் செயலும் புரியப்படுகிறது.

***விளக்கம் - 3:***

ஒரு பொருளை நகர்த்தவொட்டாமல் தடுப்பதற்கெனப் போடப்பட்டுள்ள தடையை அகற்றுவதும் அல்லது அந்தப்பொருளை வேறொரு பொருளில் இருந்து பிரிப்பதும், நேரடியாக அதனை நகர்த்துவதும் நகர்த்துதல் என்ற பொருளில் கொள்ளப்படும்.

***விளக்கம் - 4:***

ஒரு மிருகத்தை நகரும்படி செய்யப்படும் எந்தக்காரியமும், அந்த மிருகத்தை நகர்த்துவதாகவே கொள்ளப்படும். நகர்த்தப்பட்டால் அந்தப் பொருளையும் அப்படியே நகர்த்தியதாகக் கொள்ளப்படும்.

***விளக்கம் - 5:***

சம்மதம் தெளிவாகத் தரப்படலாம். அல்லது பூடகமாகவும் தரப்படலாம், சொத்துக்கு உரியவர் மட்டுமின்றி, அவர் சார்பில் அதிகாரம் பெற்ற வேறு யாராலும் அளிக்கப்பட்ட சம்மதமும், அத்தகைய சம்மதமாகவே கொள்ளப்படும்.

பிரிவு — 379

## திருட்டுக் குற்றத்திற்கான தண்டனை

## Punishment for Theft

திருட்டுக் குற்றத்தை யார் புரிந்தாலும் அந்த நபருக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கலாம்.

பிரிவு — 380

## வசிப்பிடங்கள் போன்றவற்றில் திருட்டு

## Theft in Dwelling House etc.

குடியிருப்பதற்காகப் பயன்படும் அல்லது சொத்துக்களை பாதுகாப்பாக வைப்பதற்குப் பயன்படும் வீடு, கூடாரம் அல்லது கப்பலில் திருடுபவர்களுக்கு ஏழாண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

பிரிவு — 381

## உரிமையாளரிடம் எழுத்தர் அல்லது பணியாளர் செய்யும் திருட்டு

## Theft by Clerk or Servant of Property in Possession of Master

ஒருவரிடம் பணியாளராக அல்லது எழுத்தராகப் பணிபுரியும் ஒரு நபர் தம்முடைய முதலாளியின் பொருளைத் திருடினால் ஏழு ஆண்டுகள் வரை சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 382

## திருடுவதற்கு முன்னர் அல்லது செய்ய முற்படும் போது மரணம்- காயம் ஏற்படுத்துதல்

## Theft after Preparation made for Causing Death, Hurt or Restraint in Order to the Committing Theft

திருடுவதற்காக அல்லது திருடியபின் பிடிபடாமல் தப்பிச் செல்வதற்காக அல்லது திருடிய பொருளைத் தன்னிடத்திலேயே வைத்திருப்பதற்காக மரணம் அல்லது காயம் அல்லது தடுத்தல் ஆகியவற்றிற்கான ஆயத்தங்களைச் செய்து விட்டு அல்லது மரணத்தைப் பற்றிய அல்லது காயம் உண்டாகும் என்ற அல்லது தடுக்கப்படுவோம் என்ற அச்சத்தைப் பிறருக்கு ஊட்டுவதற்கான ஆயத்தம் செய்துவிட்டு யாரேனும் திருடினால், அந்த நபருக்குப் பத்து ஆண்டுகள் வரையில் கடுங்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

***உதாரணம்:***

1. முனியனுடைய சொத்தை முருகேசன் திருடுகிறான். திருடும் பொழுது முனியன் தடுத்தால் அவனுக்குக் காயம் உண்டாக்குவதற்காகத் தோட்டாக்கள் நிரப்பப் பெற்ற கைத்துப்பாக்கியைத் தன் உடைக்குள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறான். முருகேசன் இந்தப் பிரிவின் கீழ் குற்றவாளி ஆகிறான்.

2. ஒருவருடைய சட்டைப் பையிலுள்ள பொருளைத் திருடும்பொழுது தம்முடைய ஆட்களை அவரைச் சுற்றிவளைத்து கொண்டிருக்கும்படி செய்கிறான். திருடுவதைத் தடுப்பதற்கு முயற்சி செய்தால் அவரைத் தடுப்பது தான்அவர்களுடைய வேலை, எனவே திருடும் நபர் இந்தப் பிரிவின்படி குற்றவாளி ஆகிறான்.

பிரிவு — 383

## அச்சுறுத்திப் பொருள் பறித்தல்

## Extortion

ஒருவருக்குத் தீங்கிழைக்கப்படும் என்று பயன்படுத்தி, அவரிடமிருந்து ஒரு சொத்தை அல்லது மதிப்புள்ள காப்பீட்டை அல்லது முத்திரையிடப்பட்டும் கையொப்பமிட்டும் உள்ள மதிப்புள்ள காப்பீட்டைக் கொடுக்கும்படி தூண்டுவதை 'அச்சுறுத்திப் பொருள் பறித்தல்' என்று சொல்லப்படும். அத்தகைய பயத்தை பொருளை வைத்திருக்கும் நபருக்காவது அல்லது வேறு ஒருவருக்காவது உண்டாக்கலாம்.

***உதாரணம்:***

1. தனக்குப்பணம் கொடுக்காவிட்டால் ராமசாமியைப் பற்றி அவதூறான ஒரு செய்தியை வெளியிடுவேன் என்று பாலன் மிரட்டுகிறான். அதன் மூலம் ராமசாமியைத் தனக்குப் பணம் கொடுக்குமாறு தூண்டுகிறான். ஆகவே பாலன் அச்சுறுத்திப் பொருள் பறிக்கும் குற்றத்தைப் புரிகிறான்.

2. விளைச்சலின் ஒரு பிரிவுயைத் தனக்குத் தருவதாக எழுதிக் கொடுக்கா விட்டால், ஆட்களை விட்டுத் தொல்லைப்படுத்துவேன் என்று நிலச் சொந்தக்காரரை ஒருவன் மிரட்டுகிறான். மிரட்டலுக்குப் பயந்து. நிலச் சொந்தகாரரும் அப்படியே எழுதிக் கொடுத்து விடுகிறான். மிரட்டித் தன் விருப்பத்தைச் சாதித்துக் கொண்டவன் இந்தப் பிரின்படி குற்றவாளி ஆகிறான்.

## பிரிவு — 390
## கொள்ளை
## Robbery

கொள்ளையில் திருட்டு அல்லது அச்சுறுத்திப் பொருள் பறித்தல் நடை பெற்றிருக்கும்.

திருடுவதற்கு அல்லது திருடும்போது அல்லது திருடிய பொருளைக் கொண்டு செல்ல முயற்சி செய்யும் பொழுது குற்றவாளியால் யாருக்காவது தன்னிச்சையாக மரணம் அல்லது காயம் அல்லது முறையின்றித் தடுத்தல் நிகழ்ந்தாலும் அல்லது அதற்கான முயற்சி நடைபெற்றாலும் அல்லது மரணம் அல்லது காயம் அல்லது முறையின்றித் தடுத்தல் உடனே நிகழும் என்ற பயம் உண்டாக்கப்பட்டாலும் அத்தகைய திருட்டைக் கொள்ளை என்று சொல்லப்படும்.

அச்சுறுத்திப் பொருள் பறிக்கும் பொழுது அச்சுறுத்தப்படும் நபருக்கு அருகில் குற்றவாளி இருக்கிறான். அந்த நபருக்கு அல்லது வேறொருவனுக்கு மரணம், காயம் அல்லது முறையின்றித் தடுத்தல் உடனே நிகழும் என்ற பயத்தை ஊட்டி, அவரிடமிருந்து அந்த இடத்திலேயே பொருளைப் பறித்தால் அந்தக் குற்றமும் கொள்ளை என்றே சொல்லப்படும்.

***விளக்கம் :***

அத்தகைய பயத்தை உண்டாக்குவதற்குப் போதுமான தூரத்தில் குற்றவாளி இருந்தால், அவன் அருகில் இருந்ததாகக் கொள்ளப்படும்.

a) கந்தசாமியைக் கீழேதள்ளி அழுத்திப் பிடித்துக் கொண்டு அவனிடமுள்ள ஆபரணங்களையும் பணத்தையும் ஜேம்ஸ் திருடும்பொழுது தன்னிச்சையாக கந்தசாமியை எங்கும் செல்லவிடாமல் முறையின்றி தடுப்பதால் இந்தத் திருட்டு கொள்ளையாகிறது.

b) நெடுஞ்சாலையில் வடிவேலுவை வழிமறித்த கண்ணப்பன் தன் கைத்துப்பாக்கியால் காயம் ஏற்படும் என்று அச்சுறுத்தி வடிவேலுவிடமிருந்து பணம் பறிக்கிறான். அந்த இடத்தில் அவன் நேரிலும் இருக்கிறான். எனவே கண்ணப்பன் மீது கொள்ளையடித்த குற்றம் சாரும்.

c) சோமுவை அவனுடைய குழந்தையையும் நெடுஞ்சாலையில் சங்கரன் சந்திக்கிறான். சோமுவின் குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்ட சங்கரன் அந்தக் குழந்தையை மலை உச்சியிலிருந்து கீழே எறிந்து விடுவேன் என்று அச்சுறுத்தி சோமுவிடம் இருந்து பணம் பறிக்கிறான். சங்கரன் மீது கொள்ளையடித்த குற்றம் சாரும்.

d) 'உன்னுடைய குழந்தை' என்னுடைய கூட்டாளிகளிடம் அகப்பட்டுக் கொண்டது எங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் ரொக்கமாக கொடுக்காவிட்டால் உன்னுடைய குழந்தையைக் கொன்றுவிடுவோம் என்று அச்சுறுத்தி ஒருவரிடமிருந்து பணம் பறிக்கப்படுகிறது. இதனை

அச்சுறுத்திப் பொருள் பறித்த குற்றமாகக் கொள்ள வேண்டும். குழந்தையை உடனே கொன்று விடுவார்கள் என்ற அச்சம் உண்டாக்கப்பட்டால்தான் இந்தக் குற்றம் கொள்ளை ஆகும்.

பிரிவு — 391

## கூட்டுக்கொள்ளை
## Dacoity

ஐந்து பேர்கள் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒன்றுகூடிக் கொள்ளை அடிக்கும்போது அந்தக் கொள்ளையைக் 'கூட்டு கொள்ளை' என்று கூறுகிறோம். கொள்ளையடிப்பவர்கள் அல்லது கொள்ளையடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் அவர்களுக்குத் துணை நிற்பவர்கள் இன்னும் அந்த சம்பவம் நடைபெறும் இடத்தில் ஐந்து பேர்களுக்கு மேல் இருந்தால் அதுவும் கூட்டுக் கொள்ளையாகும்.

பிரிவு — 392

## கொள்ளையடித்ததற்கான தண்டனை
## Punishment for Robbery

கொள்ளையடிக்கும் குற்றத்தை யார் புரிந்தாலும் பத்து ஆண்டுகள் வரையில் கடுங்காவலுடன் அபராதமும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

சூரியஅஸ்தமனத்துக்குப் பிறகும் சூரியஉதயத்துக்கு முன்னும் அத்தகைய கொள்ளை நடைபெற்றிருந்தால், பதினான்கு ஆண்டுகள் வரையில் தண்டனை நீடிக்கப்படலாம்.

பிரிவு — 393

## கொள்ளையடிக்க முயற்சி செய்தல்
## Attempt to Commit Robbery

கொள்ளையடிப்பதற்கு யார் முயற்சி செய்தாலும் ஏழு ஆண்டுகள் வரை கடுங்காவலும் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 394

## கொள்ளையடிக்கும்போது தன்னிச்சையாக காயம் ஏற்படுத்துதல்
## Voluntarily Causing Hurt in Committing Robbery

கொள்ளையடிக்கும்போது அல்லது கொள்ளையடிக்க முயற்சி செய்யும்போது கொள்ளையடித்த நபர் அல்லது அவருடன் அந்த கொள்ளையில் ஒத்துழைத்த வேறு யாராவது தன்னிச்சையாகக் காயம் ஏற்படுத்தினால் அந்த குற்றத்துக்கு ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரை கடுங்காவல் அத்துடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 395

## கூட்டுக் கொள்ளைக்கான தண்டனை

## Punishment for Dacoity

கூட்டுக் கொள்ளை அடிப்பவர்களுக்கு ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரை சிறைக்காவல் அத்துடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 396

### கூட்டுக் கொள்ளையுடன் கொலை செய்தல்

## Dacoity with murder

கூட்டுக் கொள்ளையில் சம்பந்தப்பட்ட நபர்களில் யாராவது, அப்படிக் கூட்டுக் கொள்ளையடிக்கும்போது யாரையாவது கொலை செய்துவிட்டால் கூட்டுக்கொள்ளையில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் மரண தண்டனை அல்லது ஆயுள்தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரை சிறைக்காவல் தண்டனையாக விதிக்கப்படும். அத்துடன் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு -399

### கூட்டுக் கொள்ளையிடுவதற்கு ஆயத்தம் செய்தல்

## Making Preparation to Commit Dacoity

கூட்டுக்கொள்ளை அடிப்பதற்கான ஆயுத்தம் யார் புரிந்தாலும் பத்து ஆண்டுகள் வரை கடுங்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாய விதிக்கப்படும்.

பிரிவு 402

### கூட்டுக்கொள்ளையடிப்பதற்காகக் கூடுதல்

## Assembling for Purpose of Committing Dacoity

இந்தச் சட்டம் அமலாக்கப்பட்ட பிறகு கூட்டுக் கொள்ளையடிப்பதற்கென ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடி இருக்கும் கூட்டத்தில் ஒருவராக இருப்பவருக்கு ஏழு ஆண்டுகள் வரை கடுங்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 403

### சொத்துக்களை கையாடல்

## Dishonest Misappropriation of Property

நேர்மையின்றி ஓர் அசையும் பொருளைத் தன்னுடைய சொந்த உபயோகத்திற்கென மாற்றிக் கொள்வதும் கையாடல் செய்த குற்றமேயாகும். இந்த குற்றத்துக்கு இரண்ட ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

***உதாரணம்:***

1. சங்கரனுக்குச் சொந்தமான சொத்தை தன்னுடையது என்று நம்பிய சரோஜா நல்லெண்ணத்துடன் அதனை எடுத்துக் கொள்கிறாள். இந்த நிலையில் சரோஜா மீது திருட்டுக் குற்றம் சாட்ட முடியாது. ஆனால் தன்னுடைய தவறை உணர்ந்த பிறகும் சரோஜா நேர்மையின்றி அந்தச் சொத்தைத் தன் சொந்த உபயோகத்திற்கென வைத்துக்கொண்டால் சரோஜா மீது இந்தப் பிரிவின்கீழ் குற்றம் சாட்டப்படும்.

2. பரமசிவமும் பாஸ்கரனும் நண்பர்கள், பாஸ்கரின் வீட்டுக்குச் சென்ற பரமசிவம், அவன் இல்லாதபோது அவனுடைய வீட்டிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு போகும்போது, படித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்து விடலாம் அதற்கு பாஸ்கர் ஆட்சேபம் தெரிவிக்க மாட்டார் என்ற நல்லெண்ணத்துடன் அப்படி செய்திருந்தால் பரமசிவத்தின் மீது பழி இல்லை. ஆனால் அந்தப் புத்தகத்தை விற்றுப் பணத்தைப் பரமசிவம் எடுத்துக் கொண்டால் பரமசிவத்தின் மீது கையாடல் செய்த குற்றம் சுமத்தப்படும்.

***விளக்கம்-1:***

ஒரு முறை நேர்மையின்றிக் கையாடல் செய்தாலும் இந்தப் பிரிவின்கீழ் குற்றமாகும்.

***உதாரணம்:***

ராஜுவுக்கு சொந்தமான அரசாங்க கடன் பத்திரத்தை ராமன் வழியில் கண்டெடுக்கிறான். அதனை அவன் ஈடுகாட்டி பணம் பெறுகிறான். பிறகு அதனை மீட்டு ராஜுவிடம் கொடுத்துவிட வேண்டும் என்பதே அவனுடைய நோக்கமாகும். இருப்பினும் ராமன்மீது இந்தப் பிரிவின்படி குற்றம் சாட்டப்படும்.

***விளக்கம் - 2:***

1. ஒருவர் ஒரு பொருளைக் கண்டெடுக்கிறார். அதனுடைய சொந்தக்காரர் யார் என்று அவருக்குத் தெரியாது. சொந்தக்காரர் வந்து கேட்டால் திருப்பிக் கொடுத்துவிடலாம் என்ற நல்லெண்ணத்துடன் அதனைப் பாதுகாத்து வருகிறார். அவர் நேர்மையின்றி அதனை கையாடல் செய்ததாக அல்லது தமக்கென்று எடுத்துக்கொண்டாதாகக் குற்றம் சாட்ட முடியாது.
2. ஆனால் அதன் சொந்தக்காரர் யாரென்று தெரிந்த பிறகும், அந்த நபர் அந்த சொத்தைத் தமக்கென்று வைத்துக்கொள்வது கையாடல் செய்த குற்றமாகும். சொந்தக்காரர் யாரென்று தெரிந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தெரிந்தவுடன் அவருக்கு மேற்படி பொருள் தன் வசத்தில் இருக்கிறது என்று தெரிவிக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் இருப்பது குற்றமாகும்.
3. பொருளின் சொந்தக்காரர் யார் என்பது பொருளைக் கண்டு எடுத்தவருக்குத் தெரியவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பொருளைத் தமக்கென எடுத்துக் கொள்ளும்போது அது தம்முடையபொருள் அல்ல என்று உணர்ந்தால் போதும் அல்லது அந்தப்பொருளின் சொந்தக்காரரைக் கண்டுபிடிக்க முடியாது என்று உணர்ந்தாலும் போதும்.

***உதாரணம் :***

அ) பாஸ்கரன் தன் பணப்பையை நழுவ விட்டுவிடுவதைப் பரந்தாமன் பார்க்கிறான். அதனைப் பாஸ்கரனிடம் கொடுக்க வேண்டும் என்ற கருத்துடன் பரந்தாமன் எடுக்கிறான். ஆனால் அதைத் தனக்கே உரியதாக எடுத்துக் கொள்கிறான். அப்போது பரந்தாமன் இந்தப் பிரிவின்படி குற்றவாளி ஆகிறான்.

ஆ) ஒருவன் வழியில் ஒரு பணப்பையைக் கண்டெடுக்கிறான். முதலில் அந்தப் பைக்குச் சொந்தக்காரர் யார் என்பது அவனுக்கு தெரியாது. ஆனால் அவன் அந்தப் பையின் சொந்தக்காரர் யார் என்று தெரிந்த பிறகும் அந்தப் பையை அவரிடம் கொடுக்காமல் தானே வைத்துக் கொள்கிறான்.

இ) ஒருவன் விலை மதிப்புள்ள ஒரு மோதிரத்தை தெருவில் கண்டு எடுக்கிறான். அது யாருடைய மோதிரம் என்ற கண்டறிய முயற்சி செய்யாமல் உடனே அதனை விற்றுப் பணத்தை எடுத்துக்கொள்கிறான். அவன் குற்றவாளி ஆகிறான்.

பிரிவு — 406

**நம்பிக்கை மோசடி செய்ததற்கான தண்டனை**

## Punishment for Criminal Breach of Trust

நம்பிக்கை, மோசம் செய்த குற்றத்தை யார் புரிந்தாலும், அந்த நபருக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 409

## பொதுஊழியர் வங்கி, வியாபாரி அல்லது தரகர் ஏஜண்ட் நம்பிக்கை மோசடி செய்ததற்கான தண்டனை

## Criminal Breach of Trust by Public Servant or by Banker or Merchant or Agent

ஒரு பொதுஊழியரிடம் அல்லது ஒரு வங்கி நிர்வாகி (பாங்கர்) யிடம் அல்லது வியாபாரி, தரகர் ஏஜெண்ட அல்லது அத்தகைய நிலையில் பணி புரிபவர் ஆகியவர்களிடம் ஒரு சொத்து ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அல்லது ஒரு சொத்தின் ஆதிக்கம் அவர்களிடம் வரும்படி செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் அந்தச் சொத்தை அவர்கள் நம்பிக்கை மோசம் செய்தல் அந்தக் குற்றத்துக்கு ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு - 410

## திருட்டு சொத்து

## Stolen Property

திருட்டு அல்லது அச்சுறுத்திப் பெறல் அல்லது கொள்ளை அல்லது குற்றக் கையாடல் அல்லது நம்பிக்கை மோசம் செய்தல் ஆகியவற்றைப் புரிவதன் மூலம் கிடைத்த சொத்து கள்ளப்பொருள் (திருட்டுச் சொத்து) என்று சொல்லப்படுகிறது. அத்தகைய பொருள் இந்தியாவுக்குள்ளேயோ அல்லது இந்தியாவுக்கு வெளியேயோ எங்கே மாற்றப்பட்டிருந்தாலும் அது கள்ளப்பொருளாகும். ஆனால் அந்தப்பொருள் சட்டப்பூர்வமாக அதன் மீது உரிமை கொண்டாடக் கூடியர் வசத்தில் வரும்போது அது கள்ளப் பொருள் ஆவதில்லை.

பிரிவு – 411

## கள்ளப்பொருளை கரவுடன் பெறுதல்

## Dishonestly Receiving Stolen Property

ஒருவர் அத்தகைய கள்ளப் பொருளை கள்ளப்பொருள் என்று தெரிந்த பின்னும் நேர்மையின்றிப் பெறுவதும் தம்வசம் வைத்துக்கொண்டிருப்பதும் குற்றமாகும். அந்தக் குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 412

## கரவுடன் பெற்ற கூட்டுக் கொள்ளைப் பொருள்

## Dishonestly Receiving Property Stolen, the Commission of a Dacoity

ஒரு பொருள், கூட்டுக் கொள்ளையின் மூலம் கிடைத்த கள்ளப்பொருள் என்று தெரிந்திருந்தும் அந்த பொருளை அந்த கூட்டுக் கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவரிடமிருந்து அல்லது அத்தகைய கூட்டுக்கொள்ளைக் கூட்டத்தைச் சார்ந்தவரிடமிருந்து நேர்மையின்றிப் பெறுவதும் அதை

தன்வசத்தில் வைத்திருப்பதும் குற்றமாகும். இந்த குற்றத்துக்கு ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரையில் கடுங்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 415

## வஞ்சித்தல்

## Cheating

ஒருவரை ஏமாற்றி கள்ளத்தனமாக அல்லது நேர்மையின்றி ஏமாற்றப்பட்டவரைத் தூண்டி அவரிடம் உள்ள சொத்தை பிறருக்குக் கொடுக்கும்படி செய்வதும், அல்லது பிறர் அவருடைய சொத்தை வைத்துக்கொள்வதற்கு சம்மதம் தெரிவிக்கும்படி செய்வதும் அல்லது ஏமாற்றப்பட்டவரைக் கருத்துடன் தூண்டி அவர் செய்யாத காரியத்தைச் செய்யும்படியும் செய்ய வேண்டிய காரியத்தை செய்யாதிருக்கும்படி செய்வதும், அத்தகைய காரியத்தை அவர் செய்வதால் அல்லது செய்யாமல் இருப்பதால் அவருடைய மனம், உடல், புகழ் அல்லது சொத்துக்குத் தீங்கினை உண்டாக்கினாலும் அல்லது தீங்கு உண்டாக்கக் கூடியதாக இருந்தாலும் அதனை வஞ்சித்தல் என்று சொல்லப்படுகிறது.

***விளக்கம் :***

நேர்மையின்றித் தகவல்களை மறைப்பதும் இந்த பிரிவின்படி ஏமாற்றுதலாகக் கொள்ளப்படும்.

***உதாரணம் :***

அ) சிவக்குமார், தாம் ஓர் ஐ.ஸீ.எஸ் அதிகாரி என்ற கருத்துடன் கந்தசாமியை ஏமாற்றி அவருடைய கடையிலிருந்து கடனுக்கு பொருட்களை வாங்குகிறார். அவற்றிற்கு உரிய பணத்தைத் திருப்பித்தர வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லாதபோது அவர் இந்த பிரிவின்படி குற்றவாளி ஆகிறார்.

ஆ) ஒரு பொருளின் மீது ஒரு பொய்யான குறியை இட்டு, அந்தப்பொருளைப் புகழ் பெற்ற தயாரிப்பாளர் ஒருவர் தயாரித்ததாக மற்றவரை நம்ப வைத்து, அவரை நேர்மையின்றி, அந்தப் பொருளை விலைக்கு வாங்கும்படி தூண்டுவது இந்த பிரிவின்படி குற்றமாகும்.

இ) ஒரு பொருளுடைய மாதிரியைக் காட்டி ஒருவரை நம்ப வைத்து, வேறு ஒரு பொருளை அவர் வாங்கும்படி நேர்மையின்றித் தூண்டுதலும் இந்தப் பிரிவின்கீழ்க் குற்றமாகும்.

பிரிவு – 416

## ஆள் மாறாட்டம்

## Cheating by Personation

ஒருவரைப் போல் நடித்து அல்லது ஒரு நபருக்குப் பதிலாக மற்றொரு நபரைக் காட்டி அல்லது தான் அல்லது அந்த நபர் வேறு ஓர் ஆள் அல்லது நபர் என்று உண்மைக்கு புறம்பாகக்கூறி அதன் மூலம் வஞ்சிப்பதை ஆள்மாறாட்டம் செய்து வஞ்சித்தல் என்று குறிப்பிடப்படும்.

***விளக்கம்:***

யாரைப்போல் ஆள்மாறாட்டம் செய்கிறோமோ அந்த நபர் உண்மையில் உள்ளவராக இருப்பினும் கற்பனை நபராக இருப்பினும் அப்படி ஆள்மாறாட்டம் செய்யும்பொழுது இந்தக் குற்றம் புரியப்படுகிறது.

***உதாரணம்:***

அ) ஒரு பெரிய பணக்காரனுடைய பெயரும் தன் பெயரும் ஒன்றாக இருக்கும்போது, தான் தான் அந்த பணக்காரர் என்று சொல்லும்போது ஆள்மாறாட்டம் செய்து வஞ்சிக்கும் குற்றம் புரியப்படுகிறது.

ஆ) இறந்துவிட்டவரைப் போல நடிக்கும்போது ஆள்மாறாட்டம் செய்யப்படுகின்றது.

பிரிவு — 420

## ஏமாற்றி மற்றும் நேர்மையின்றித் தூண்டிப் பொருளைப் பெறுதல் அல்லது கொடுக்கும்படி செய்தல்

## Cheating and Dishonestly Inducing Delivery of Property

ஒருவரை ஏமாற்றி அதன்மூலம் நேர்மையின்றி அவரைத் தூண்டி, ஒரு சொத்தைப் பிறருக்குக் கொடுக்கும்படி செய்தாலும் அல்லது ஒரு மதிப்புள்ள காப்பீட்டை உருவாக்கும்படி அல்லது மாற்றும்படி அல்லது அழிக்கும்படி செய்தாலும் அல்லது மதிப்புள்ள காப்பீடாகக் கையெழுத்திடப்பட்டு முத்திரை இட்டுப் பயன்படுத்தத்தகும் பொருளை அவ்வாறு உருவாக்க மாற்ற அல்லது அழிக்கத்தக்க செயல் புரியும்படி செய்தாலும் அத்தகைய வஞ்சனை புரிந்தவருக்கு ஏழு ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு — 425

## சொத்து அழித்தல்

## Mischief

தம்முடைய செயலால் முறையற்ற நஷ்டம் அல்லது தீங்கு பொதுமக்களுக்கு அல்லது ஒரு தனிப்பட்ட மனிதருக்கு உண்டாகும் என்று தெரிந்திருந்தும் அல்லது அத்தகைய நஷ்டம் அல்லது தீங்கினை உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் ஒரு சொத்தை அழிப்பதும் அல்லது அந்தச் சொத்தின் மதிப்பு அல்லது உபயோகத்தை அழிக்கக் கூடிய அல்லது குறைக்கக் கூடிய செயலைப் புரிந்தாலும், அதற்குப் பாதகமான செயலைப் புரிந்தாலும், சொத்து அழித்தல் செய்யப்படுவதாக கொள்ளப்படும்.

***விளக்கம் :***

அ) சொத்தின் சொந்தகாரருக்கு அத்தகைய நஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் அந்தச் செயலைப் புரியாவிட்டாலும், அந்தச் செயலால் யாருக்காவது சொத்து அழிவு அல்லது தீங்கு ஏற்படக்கூடும் என்று அறிந்திருந்தால் அதுவே போதுமானது.

ஆ) சொத்து அழித்தல் என்னும் குற்றத்தில் பிறருடைய சொத்துக்கு மட்டுமின்றி , அத்தகைய குற்றம் புரியும் நபருடைய சொந்த சொத்துக்கும் பிறருடைய சொத்துக்கும் சேர்த்து அத்தகைய பாதகம் நேரிடலாம்.

***உதாரணம் :***

1. வடிவேலுக்கு முறையற்ற நஷ்டம் உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன், சாத்தப்பன் வடிவேலுக்குச் சொந்தமான ஒரு மதிப்புள்ள காப்பீட்டைத் தீயிட்டு அழிக்கிறார். சாத்தப்பன் இந்தப் பிரிவின்படி குற்றவாளியாகிறார்.

2. ஒருவருக்குச் சொந்தமான தங்க மோதிரத்தை அவருக்கு முறையற்ற நஷ்டத்தை உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் ஆற்றுக்குள் வீசி எறிகிறோம். இந்தப்பிரிவின்படி நாம் குற்றம் புரிந்தவர்களாகிறோம்.

3. மற்றவருக்குச் சொந்தமான தோட்டத்துக்குள் நம்முடைய ஆடு, மாடுகளை, அவருடைய பயிர்களை அழிக்கவேண்டும் என்ற கருத்துடன் மேய விடுவதும் இந்தப் பிரிவின்படி குற்றமாகும்.

பிரிவு – 429

## மிருகங்களைக் கொல்லுதலும் அல்லது ஊமையாக்குதலும்
## Mischief by Killing or Maiming Cattle, etc., of Any Value or any Animal of the Value of Fifty Rupees

ஐம்பது ரூபாய் அல்லது அதற்கு மேலும் மதிப்புள்ள யானை, ஒட்டகம் குதிரை, கோவேறு கழுதை, எருமை, மாடு அல்லது பசு ஆகியவற்றைச் சொத்து அழிக்கும் குற்றத்தால் கொன்றாலும் விஷமிட்டு அழித்தாலும் முடமாக்கினாலும் அல்லது பயனற்றுப் போகும்படி செய்தாலும் அந்த நபருக்கு ஐந்து ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 435

## தீயிட்டு அல்லது வெடிமருந்து பொருட்களால் 100 ரூபாய் மதிப்புள்ள சொத்தை சேதப்படுத்துதல்
## Mischeif by fire or Explosive Substance with Intent to Cause Damage to Amount of One Hundred or in Case of Agricultural Produce Ten Rupees

தீயிட்டு அல்லது வெடி மருந்துப் பொருட்களால், நூறு ரூபாய் அல்லது அதற்கு மேலும் மதிப்புள்ள ஒரு சொத்தை அல்லது பத்துரூபாய் அல்லது அதற்கும் மேலும் மதிப்புள்ள அறுவடையாக்கத்தக்க பொருளை அழித்தால் அந்தக் குற்றம் புரிந்த நபருக்கு ஏழு ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 441

## அத்துமீறல்
## Criminal Trespass

குற்றம் புரியவேண்டும், மிரட்ட வேண்டும், அவமதிக்கவேண்டும் அல்லது தொல்லை தரவேண்டும் என்ற கருத்துடன் ஒருவருக்குச் சொந்தமான அல்லது அவருடைய வசத்தில் உள்ள இடத்தில் நுழைவதும்.

*(அல்லது)*

சட்டவிரோதமாக அந்த இடத்துக்குள் நுழைந்த பின்னர், குற்றம் புரியவேண்டும், மிரட்ட வேண்டும். அவமதிக்க வேண்டும் அல்லது தொல்லை தர வேண்டும் என்ற கருத்துடன் சட்டவிரோதமாக அந்த இடத்தில் இருப்பதும், குற்றங்கருதி அத்துமீறல் என்று சொல்லப்படும்.

பிரிவு – 442

## அத்துமீறி வீடு புகுதல்
## House Trespass

மனிதா் குடியிருப்பதற்காகப் பயன்படும் வீடு, கூடாரம் அல்லது கப்பலுக்குள் குற்றம் கருதி அத்துமீறல் செய்வதைக் குற்றம் கருதி வீடு புகுதல் என்று சொல்லப்படும்.

வழிபாட்டுக்கு உரிய ஒரு கட்டடத்துக்குள் அல்லது பண்டங்களைப் பாதுகாக்க வைத்திருக்கும் கட்டடத்துக்குள் குற்றங்கருதி அத்துமீறலையும் குற்றங்கருதி வீடு புகுதல் என்றே குறிக்கப்படும்.

***விளக்கம் :***

அத்துமீறுவோரின் உறுப்பின் ஒரு பிரிவு உள்ளே நுழைந்தாலும் குற்றங்கருதி வீடு புகுதல் என்ற மாற்றம் நடைபெற்றதாகக் கொள்ளப்படும்.

பிரிவு – 443

## ஒளிந்து வீடு புகுதல்
## Lurking House Trespass

கட்டடம் கூடாரம் அல்லது கப்பலுக்குள்ளிலிருந்து பிறரை வெளியே தள்ளுவதற்கு உரிமை உடையவருக்குத் தெரியாதபடி, குற்றங்கருதி வீடு புகுதலை மறைந்திருந்து புரிவதற்கான ஆயத்தங்களுடன் மேற்கொண்டால் அதனை ஒளிந்து வீடு புகுதல் என்கிறோம்.

பிரிவு – 444

## இரவில் ஒளிந்து வீடு புகுதல்
## Lurking House-Trespass by Night

சூரிய உதயத்துக்குப் பிறகும் சூரிய உதயத்துக்கு முன்னும் ஒளிந்து வீடு புகுதலை இரவில் ஒளிந்து வீடு புகுதல் என்று குறிப்பிடப்படும்.

பிரிவு – 447

## அத்து மீறலுக்கு தண்டனை
## Punishment for Criminal Trespass

அத்து மீறி நுழையும் குற்றத்தை யார் புரிந்தாலும் அந்த நபருக்கு மூன்று மாதங்கள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 454

## வலிந்து வீடு புகுந்ததற்கான குற்றத்திற்குத் தண்டனை
## Lurking House Trespass or House Breaking in Order to Commit Offence Punishable with Imprisonment

தண்டனைக்குரிய குற்றத்தைப் புரிவதற்காக ஒளிந்து வீடு புகும் அல்லது வலிந்து வீடு புகும் நபருக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக

விதிக்கப்படும். செய்யநினைத்த குற்றம் திருட்டாக இருப்பின், அந்த நபருக்குப் பத்து ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 457

## இரவில் வலிந்து வீடு புகுந்த குற்றத்திற்குத் தண்டனை

## Lurking House Trespass or House Breaking by Night in Order to Commit Offence Punishable with Imprisonment

சிறைத் தண்டனைக்குரிய குற்றத்தைப் புரியவேண்டும் என்பதற்காக யாரேனும் ஒளிந்து வீடு புகுதல் அல்லது வலிந்து வீடு புகுதல் ஆகிய குற்றத்தை இரவில் புரிந்தால் அந்த நபருக்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

புரியநினைத்த குற்றம் திருட்டுக் குற்றமாக இருப்பின் அந்த நபருக்கு பதினான்கு ஆண்டுகள் வரையில் சிறைக்காவலைத் தண்டனையாக விதிக்கவேண்டும்.

பிரிவு – 445

## வலிந்து வீடு புகுதல்

## House Breaking

குற்றம் புரிவதற்கென ஒரு வீட்டுக்குள் நுழைவதற்கு அல்லது குற்றம் புரிந்தபின் அந்த வீட்டை விட்டு வெளியேற்றுவதற்கு அல்லது குற்றங்கருதி வீடு புகுவதற்கு,-

1) தன்னால் அல்லது தனக்கு குற்ற உடந்தையாக உள்ள வேறு ஒரு நபரால் உண்டாக்கப்பட்ட வழியின் மூலமாக அந்த வீட்டுக்குள் நுழைவது அல்லது அந்த வீட்டிலிருந்து வெளியேறுவது.

2) தன்னையும் தனக்குக் குற்ற உடந்தையாக உள்ள நபரையும் தவிர வேறு எவருக்கும் பயன்படுத்தக் கருதாத வழியில் அந்த வீட்டுக்குள் நுழைவது அல்லது அந்த வீட்டிலிருந்து வெளியே வர அல்லது சுவர் அல்லது கட்டடத்தின் மீதேறி அதன் மூலம் அந்த வழியை அடைவது.

3) தன்னால் அல்லது தனக்குக் குற்ற உடந்தையாக இருக்கும் நபரால், அந்த வீட்டின் சொந்தக்காரர் உண்டாக்க நினைக்காத ஒரு வழியை உண்டாக்கி அதன்மூலம் குற்றம் புரிவதற்கென உள்ளே நுழைவது, வெளியே வருவது.

4) குற்றம் கருதி வீடு புகுவதற்கென வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே செல்வது அல்லது வெளியே வருவது.

5) ஒருவரை அச்சுறுத்தி மிரட்டி அல்லது வன்செயல் மூலம் அந்த வீட்டுக்குள் குற்றங்கருதி உள்ளே புகுவது, குற்றம் புரிந்த பின் வெளியே வருவது.

6) தடுக்கப்பட்டுள்ள (மூடப்பட்டுள்ள) வழியைத் தானாக அல்லது தனக்குக் குற்ற உடந்தையாக உள்ள நபரால் திறந்து அதன் மூலம் அந்த வீட்டுக்குள் புகுவது, வெளியே வருவது.

ஆகிய முறைகளைக் கையாண்டு வீடு புகுதலை வலிந்து வீடு புகுதல் என்று கூறப்படும்.

***விளக்கம் :***

ஒரு வீட்டுக்குள் அந்த வீட்டுடன் தொடர்புள்ள மற்றொரு வீடும் (அவுட் ஹவுஸ்) அந்த வீட்டின் ஒரு பகுதியாகவே இந்தப் பிரிவில் கருதப்படும்..

***உதாரணம்:***

a) ஒரு வீட்டுக்குள் கன்னம் வைத்துக் கையை உள்ளே நுழைப்பதும் இந்தப் பிரிவின் கீழ் அடங்கும்

b) ஒரு கப்பலிலுள்ள துவாரத்தின் வழியாகப் புகுவதும் அத்துமீறி வலிந்து வீடு புகுதலாகவே கொள்ளப்படும்.

c) ஒரு வீட்டின் ஜன்னல் வழியாக உள்ளே புகுவதும், அத்துமீறி வலிந்து வீடு புகுதல் ஆகும்.

d) உள்ளே தாளிடப்பட்டிருக்கும் கதவைத் திறந்து கொண்டு, அத்துமீறி புகுதலை, வலிந்து வீடு புகுதலாகக் கொள்ளப்படும்.

e) ஒரு வீட்டின் கதவிலுள்ள சந்து வழியாக ஒரு கம்பியை நுழைத்து உள்ளே வர இருக்கும் தாழ்பாளைத் தள்ளித் திறந்துகொண்டு, அந்த வீட்டுக்குள் புகுவதும் வலிந்து வீடு புகுதலாகவே கொள்ளப்படும்.

பிரிவு– 446

## இரவில் வலிந்து வீடு புகுதல்
## House Breaking by Night

சூரிய உதயத்திற்கு முன் அல்லது சூரிய அஸ்தமனத்திற்குபின் நடைபெறும் வலிந்து வீடு புகுதலை இரவில் வலிந்து வீடு புகுதல் என்று கொள்ளப்படும்.

பிரிவு – 468

## ஏமாற்றுவதற்காக பொய்யான ஆவணத்தைத் தயாரித்தல்
## Forgery of Purpose of Cheating

பொய்யாக ஓர் ஆவணத்தைப் புனைவதன்மூலம் பிறரை வஞ்சிப்பதற்கு அதனைப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்துடன், அத்தகைய பொய்யாவணம் புனைவோருக்கு ஏழு ஆண்டுகள் வரை சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு – 471

## பொய்யாகப் புனையப்பட்ட உண்மையானதாக உபயோகம் செய்தல்
## Using as Genuine a Forged Document

பொய்யாகப் புனையப்பட்ட ஆவணத்தை அது அத்தகைய ஆவணம் என்று தெரிந்திருந்தும் நேர்மையின்றி அல்லது மோசடியாக அதனை உண்மையான ஆவணம் என்று பயன்படுத்துவோருக்கு, பொய்யாக ஓர் ஆவணத்தைப் புனைந்தவருக்கு உரிய தண்டனை விதிக்கப்படும்.

## அத்தியாயம் - 18

## (CHAPTER – 18)

## ரூபாய்நோட்டுகள், பாங்கு நோட்டுகள் பற்றிய குற்றங்கள்
## Offences Relating to Currency Notes and Bank Notes

### பிரிவு – 489 – A

ரூபாய்நோட்டுகளை அல்லது வங்கிநோட்டுகளைப் போலியாகத் தயாரித்தலும் அல்லது அவற்றைப் போலியாக்குவதற்கான வேலையில் எந்த ஒரு பிரிவுயையும் தெரிந்து செய்தாலும் அந்த நபருக்கு ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

***விளக்கம் :***

இந்த பிரிவிலும் 489 B, 489 C, 489 E ஆகிய பிரிவுகளிலும் வங்கி நோட்டு என்று சொல்லப்படுவது அதை வைத்திருப்பவர், கேட்கும் போது பணம் பெறத்தக்க உத்தரவை அடக்கியுள்ள நோட்டைக் குறிக்கும். உலகின் எந்தப் பிரிவிலும் வங்கி தொழில் நடத்தும் ஒருவரால், அத்தகைய நோட்டு அளிக்கப்பட்டாலும் அல்லது அதிகாரம் பெற்ற எந்த அரசாங்கத்தாலும் அரசாலும் அளிக்கப்படலாம். வங்கிகளால்தரப்படும் கடன்உறுதிப் பத்திரங்களையும் இந்த சொல் குறிக்கும்.

### பிரிவு – 489 – B

## பொய்யாக புனையப்பட்ட அல்லது போலியான ரூபாய் நோட்டு அல்லது வங்கி நோட்டு உண்மையானதாக உபயோகம் செய்தல்
## Using as Genuine Forged or Counterfeit Currency Notes or Bank Notes

பொய்யாகப் புனையப்பட்ட அல்லது போலியாக்கப்பட்ட ரூபாய் நோட்டை அல்லது வங்கிநோட்டை, அதன் தன்மையை உணர்ந்திருந்தும் யாரேனும் அதனை விற்பதும்,, வாங்குவதும், பெறுவதும் அல்லது அவற்றைச் செலாவணி செய்வதும் அவற்றை நல்ல நோட்டுகளைப்போல் பயன்படுத்துவதும் குற்றமாகும். இந்தக் குற்றத்துக்கு ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள்வரை சிறைக்காவலுடன் அபராதமும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும்.

## அத்தியாயம் - 22
## (CHAPTER – 22)

## மிரட்டுதல், அவமதித்தல், தொந்தரவு தருதல்
## Criminal Intimidation, Insult and Annoyance

### பிரிவு – 503

## மிரட்டுதல், அவமதித்தல் ஆகிய குற்றங்கள்
## Criminal Intimidation

ஒருவருடைய அல்லது அவர் அக்கறைகாட்டும் மற்றொருவருடைய உடலுக்கு, உடமைக்கு அல்லது புகழுக்குத் தீங்கிழைக்கப்படும் என்று அவருக்குப் பீதியை உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது செய்ய வேண்டிய செயலைச் செய்யும்படி வற்புறுத்த வேண்டும் என்ற கருத்துடன் ஒருவரை அந்த மிரட்டலுக்கு இணங்கி, அவர் செயல்படுமாறு செய்வதற்கென மிரட்டுவதை, குற்றங்கருதி மிரட்டுதல் என்கிறோம்.

***விளக்கம் :***

நாம் அக்கறை காட்டக்கூடிய ஒரு நபர் இறந்து விட்டாலும் அவருடைய புகழுக்குப் பங்கம் விளைவிக்கப்படும் என்று மிரட்டுவதும் இந்தப் பிரிவில் அடங்கும்.

***உதாரணம் :***

தன்மீது ஓர் உரிமையியல் வழக்கைப்போடாமல் தடுப்பதற்காக அவருடைய வீட்டை எரித்து விடுவேன் என்று மிரட்டுவது இந்தப் பிரிவின் படி குற்றமாகிறது.

பிரிவு — 506

### குற்றங்கருதி மிரட்டுவதற்கான தண்டனை

## Punishment for Criminal Intimidation if Threat be to Cause or Grievous Hurt etc.

'குற்றம் கருதி மிரட்டல்' என்ற குற்றத்தைப் புரிவருக்கு இரண்டு ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

அத்தகைய மிரட்டுதல், உயிர் போக்கும் குற்றம் புரியப்படும் அல்லது கொடுங்காயம் உண்டாக்கப்படும் அல்லது தீயிட்டுச் சொத்து அழிக்கப்படும் அல்லது மரண தண்டனை அல்லது ஆயுள்தண்டனை பெறத்தக்க குற்றம் புரியப்படும் என்று மிரட்டுவதாக இருப்பின், அந்த நபருக்கு ஏழு ஆண்டுகள் வரையில் சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

## அத்தியாயம் - 23
## (CHAPTER – 23)

### குற்றம் செய்ய முயற்சித்தல்
### 14 of Attempts to Commit Offences

பிரிவு — 511

### குற்றம் செய்ய முயற்சித்தல்

## Punishment for Attempting to Commit Offences Punishable with Imprisonment or for the Imprisonment

இந்தச்சட்டத் தொகுப்பின்படி, ஆயுள் தண்டனை பெறத்தக்க அல்லது சிறைத் தண்டனை பெறத்தக்க குற்றத்தைப் புரிவதற்கு அல்லது குற்றம் செய்வதற்கான ஏற்பாட்டுக்கு முயற்சி செய்தாலும் அத்தகைய முயற்சியின் விளைவாக அந்தக் குற்றம் புரிவதற்கான எந்த செயலை புரிந்தாலும் அத்தகைய குற்ற முயற்சிக்கு, இந்த சட்டத் தொகுப்பில் உரிய தண்டனை ஏதும் குறிப்பிடப்படவில்லையெனில், குற்றத்துக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு இருந்தால் அதில் பாதியையும் அல்லது வேறு தண்டனை குறிப்பிடப்பட்டிருந்தால் குறிப்பிடப்பட்டுள்ள உச்சகட்டத் தண்டனையில் பாதியையும் அந்த குற்ற முயற்சிக்குத் தண்டனையாக விதிக்கப்படும் அபராதம் மற்றும் இரண்டும் தண்டனையாக விதிக்கப்படலாம்.

***உதாரணம்:***

அ) ஒருவருடைய பெட்டியில் உள்ள நகைகளைத் திருடுவதற்காக அந்த பெட்டியைத் திறக்கிறான். பெட்டியில் நகை ஏதும் இல்லை. திருடுவதற்காக என்று துவங்கி, அதற்கு உரிய செயல் ஒன்று புரியப்பட்டுள்ளதால், அந்த நபர் இந்தப் பிரிவின்படி குற்றவாளி ஆகிறான்.

ஆ) ஒருவருடைய சட்டைப்பையில் கையை விட்டுப் பணத்தை எடுக்க முயற்சி செய்யப்படுகின்றது. சட்டைப் பையில் ஒன்றும் கிடைக்கவில்லை, எனினும் பிறருடைய சட்டைப் பைக்குள் கையை விட்ட நபரை, இந்தப் பிரிவின்படி குற்றம் சாட்டித் தண்டிக்கலாம்.

* * *